1.10.56

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



# செய்திகள்

## புதிய தீக்குச்சி

தண்ணீரில் நனைந்தாலும் எரியக்கூடிய புது மாதிரியான தீக்குச்சி களைச் சீனவில் தயாரித்திருக்கிறார்கள். இது நல்ல மழையிலும் காற்றி லுங்கூட அணையாமல் எரியுமாம்.

## புதிய ராஜ்யங்கள்

வருகிற நவம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து நம்முடைய தேசப் படத்தில் புதுமாதிரியாகத் திருத்தப்பட்ட ராஜ்யங்கள் பிரிக்கப்பட் டிருப்பதைக் காணலாம். பெரிய ராஜ்யங்கள் பதினான்கும் மத்திய ஆட்சிக்கு உட்பட்ட ஐந்து பிரதேசங்களும் ஆக, பத்தொன்பது பிரிவு களாக நமது நாடு இப்போது புதுச் சட்டப்படி திருத்தியமைக்கப்பட் டிருக்கிறது.

## மின்சார ரெயில் பாதை

சென்னை - எழும்பூருக்கும் விழுப்புரத்துக்கும் இடையே ஓடும் முக்கிய ரெயில் பாதை மின்சாரப் போக்குவரத்துப் பாதையாக மாற்றப் படுமாம். மின்சாரக் கம்பங்கள், கம்பிகள் இணைக்கும் வேலை அடுத்த வருஷம் பிப்ரவரி மாதத்தில் ஆரம்பமாகும். 1959 முதல் இந்தப் பாதையில் மின்சார ரெயில் வண்டிகள் ஓட ஆரம்பிக்கும் என்று நிர் வாகிகள் எதிர்பார்க்கிறார்கள்.

## 3000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நகரம்

இந்தூர் சமஸ்தானத்தில் சம்பால் பள்ளத்தாக்கு என்று இருக் கிறது. இந்தப் பள்ளத்தாக்கைப் புதைபொருள் இலாகாவினர் வெட்டி ஆராய்ச்சி செய்தார்கள். அங்கே கோட்டை கொத்தளங்களுடன் கூடிய ஒரு பழைய நகரின் சின்னங்கள் கிடைத்திருக்கின்றனவாம். இது மூவா யிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிறப்பாக இருந்த நகரம் என்று ஆராய்ச்சி யாளர்கள் கருதுகிறார்கள். இதற்கும் சிந்துவெளி நாகரிகத்துக்கும் சம்பந்தம் உண்டு என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

## உம்ரிகர் - இந்திய காப்டன்

இங்கிலாந்து சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு ஆஸ்தி ரேலியா கட்சி ஊர் திரும்பும்போது இந்தியாவில் மூன்று டெஸ்ட் மாட்சுகள் ஆட இருக்கிறார்கள். சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று இடங்களிலும் டெஸ்ட் மாட்சுகள் நடைபெறும். அக்டோபர் 19-ஆம் தேதி சென்னையில் முதல் டெஸ்ட் மாட்சு நடைப்பெறப் போகிறது. இந்தியாவின் கட்சிக்கு உம்ரிகர் காப்டனாகத் தேர்ந்தெடுக் கப்பட் டிருக்கிறார். இந்த டெஸ்ட் மாட்சில் ஆடுவதற்கு முன் பயிற்சி பெற, சென்னையிலிருந்து கிருபால் சிங்கும் மோகன் ராயும் பம்பாய்க்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## ஓட்டுக் கணக்குக்குப் புது யந்திரம்

டில்லி லோக சபையில் தானாகவே ஓட்டுகளைக் கணக்கு எடுக்கும் புதிய யந்திரம் ஒன்றைப் பொருத்தப் போகிறார்கள். இந்த யந்திரம் அமெரிக்காவிலிருந்து வருகிறது. பதினொரு விநாடிகளில் இது அங்கத் தினர்களின் ஓட்டுகளைப் பதிவு செய்துவிடுமாம்.

# கண்ணன்



## பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 18

1 - 10 - '56

| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| வீரனும் வீரனும் | .. | 3 |
| சைனு சு - சூ! | .. | 5 |
| பிஸ்கட் | .. | 10 |
| அநாதைக்கு ஆதரவு | .. | 11 |
| தன்மதிப்பு | .. | 13 |
| நானு? | .. | 18 |
| பாலர் கவியரங்கம் | .. | 22 |
| ஏமாந்த எழுத்தாளர் | .. | 23 |
| எண்ணிலே படங்கள் | .. | 25 |
| கறுப்பு ஸீதா | .. | 26 |
| கண்ணனின் நண்பன் | .. | 29 |
| பொம்மைக் கல்யாணம் | .. | 34 |
| புலிக்குட்டி | .. | 37 |
| எங்கள் யோசனைகள் | .. | 40 |

செய்திகள் - 2 - அட்டை:

அட்டைப் படம்

போட்டோ: N. ராமகிருஷ்ணு

செய்திகள் 2 - அட்டை

கிளைக் கழகம் 3 - அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## குறி தவறியது!

அன்று கோபுவுக்கும் சோமுவுக்கும் ஏற்பட்ட சண்டை ஒரு வருஷமாகியும் தீரவில்லை. கோபு தெருவில் வந்துகொண்டிருக்கிறுன் என்று வைத்துக் கொள்ளுங்கள். எதிரில் சோமு வந்தால் கோபு உடனே திரும்பி விடுவான்; அத்தனை விரோதம். கோபு, அவர்கள் அப்பா அம்மாவுக்கு ஒரே பையன்; பணக்காரன். சோமுவோ ஏழு பையன்களில் கடைக் குட்டி!

அன்று விதிவசமோ என்னவோ! சோமுதான் அன்று பூங்காவுக்கு வந்திருக்கிறுன் என்ருல், கோபுவும் அவன் அப்பாவுடன் அங்கே வந்துவிட்டான்!

கோபுவைக் காண சோமுவுக்கு ஆத்திரமாக இருந்தது. புதுச் சட்டைகளுடன், ஒரு கோடியில் விளையாடிக்கொண்டிருந்தான் கோபு.

சோமு இருந்தாற் போலிருந்தவன் குனிந்து ஒரு பெரிய கல்லை எடுத்தான். கோபுவை நோக்கி 'விர்'ரென்று விசிறி அடித்தான். இதைப் பார்க்குக்கு வந்த ஒருவர் பார்த்துவிட்டார். "டேய்.... பையா!" என்று வந்துவிட்டார் சோமுவை நோக்கி.

அப்போது, 'ஆ!' என்ற ஓர் அலறல். சிலர் சோமுவை நோக்கி, "இவன்தான் சார்" என்றனர். சோமுவுக்கு வெல வெலத்துப் போய்விட்டது.

கோபுவின் அப்பா, சோமுவைப் பிடித்துப் 'பட்பட்'டென்று அறைந்தார் என்றுதானே நினைக்கிறீர்கள்! அதுதான் இல்லை! சோமுவை நன்றி நிரம்பிய கண்களுடன் தழுவிக் கொண்டார். கோபுவோ, "சோமு.. உன்னை நான் என்னவோ நினைச்சேன்" என்று கண்ணீருடன் கூறினுன்.

ஏன் என்று கேட்கிறீர்களா! சோமு அடித்த கல், கோபுமேல் படவில்லை. அதற்குப் பதிலாக அவன் அருகில் ஓடிவந்த ஒரு பாம்பின் மேல் பட்டு, அந்தப் பாம்பு இறந்தது. தன்னைக் கடிக்க வந்த பாம்பை, பகைமை காட்டாமல் அடித்த சோமுவை, கோபு மறப்பானு? எல்லாம் அதிருஷ்டந்தான்!

—வெ. அனந்தன்.

# குழந்தைகளே!

'எங்கள் யோசனைகள்' என்ற பகுதிக்கு எண்ணிலடங்காக் கடிதங்கள் வந்து குவிந்திருக்கின்றன. இந்த இதழில் சில வருகின்றன. சில தொடர்ந்து வரும். இந்தப் பகுதிக்குக் குழந்தைகள் மட்டுமல்ல, பல ஆசிரியர்களும் பெற்றோர்களும் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் எழுத இருப்பவர்களையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

கண்ணன் தீபாவளி மலர் இப்போது சீரிய முறையில் உருவாகி வருகிறது. முந்திய வருஷத்து மலர்களைவிட, தரத்திலும் தோற்றத்திலும் மிகச் சிறப்பாக அமையவேண்டும் என்று பாடுபட்டு வருகிறோம். இந்த மலரில் பெரிய பெரிய எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள்; மிக மிகச் சிறந்த புகைப்படப் பகுதிகள் வரப்போகின்றன. முழுநீளச் சித்திரக் கதை ஒன்று வெளிவரப் போகிறது. சித்திரப் போட்டியில் பரிசு பெற்ற குழந்தைகளின் மூவர்ணப் படங்களை இந்த மலரில் கண்டு மகிழப் போகிறீர்கள். இன்னும் எத்தனை எத்தனையோ புதுமைகளையும் கதை - கவிதை - வேடிக்கைத் துணுக்குகளையும் சித்திரப் படங்களையும் மலரில் காணப் போகிறீர்கள். ஆண்டிலே ஒருமுறை தயாராகும் இந்தத் தீபாவளி மலர் பல ஆண்டுகள் உங்கள் நெஞ்சுக் கிழியிலே பதிந்து மகிழ்ச்சியைத் தரப்போகிறது.

உங்களுக்கு முன்னதாக ஓர் எச்சரிக்கை செய்துவிட விரும்புகிறேன். உங்கள் மலருக்கு இப்போதே உங்கள் ஊர் கண்ணன் விற்பனையாளரிடம் சொல்லி வைத்துப் பெயரையும் பதிவு செய்துகொண் டிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். புதிதாக இந்த ஆண்டில் பலர் கண்ணன் வாங்கத் தொடங்கி யிருக்கிறார்கள். அவர்களுக்கு மலர் கிடைப்பதில் உள்ள நெருக்கடி தெரிந்திருக்காது. முன்னால் சொல்லி வைக்காவிட்டால் மலர் கிடைக்காது என்பது நிச்சயம். போன வருஷம் இப்படித்தான். முன்னால் பேசாமல் இருந்துவிட்டு, அப்புறம் பணம் அனுப்பி, கடிதம் எழுதி மலர் கிடைக்காமல் பலர் ஏமாந்துவிட்டார்கள். அப்படி யாரும் ஏமாந்து போகாமல் இருப்பதற்காகவே இதைச் சொல்கிறேன். கண்ணன் விற்பனையாளர்கள் எல்லா ஊர்களிலும் இருக்கிறார்கள். அவர்களிடம் பெயரைப் பதிவு செய்துகொண்டு விடுங்கள். விற்பனையாளர்களைச் சந்திக்க இயலாத இடங்களில் உள்ளவர்கள் நேரே கண்ணன் காரியாலயத்துக்கு மலரின் தொகை ஒரு ரூபாயும் தபால் செலவுக்காக ஆறு அணாவையும் சேர்த்து மணியார்டர் மூலமோ போஸ்டல் ஆர்டர் மூலமோ அனுப்பிவிட வேண்டும். அப்படி அனுப்பிவிட்டால் நீங்கள் மலரைத் தேடிப் போக வேண்டியதில்லை. மலர் உங்களைத் தேடி வரும்.

மிகச் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக மலரை அதிகச் செலவு செய்து தயாரித்து வருகிறோம். அந்த அதிகச் செலவு காரணமாக, மிகவும் அளவாகவே மலர்களை அச்சிடுகிறோம். அதனால் முன்னால் பதிவு செய்து கொள்பவர்களுக்குத்தான் மலர் நிச்சயமாகக் கிடைக்கும்.

கண்ணன் சந்தாதாரர்கள், இதுவரை சந்தாவைப் புதுப்பிக்காமல் இருந்தால், உடனே அனுப்பிட வேண்டுகிறேன். அதனுடன் மலருக்காகப் பன்னிரண்டணாவைச் சேர்த்து அனுப்பிவைக்க வேண்டும் என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்த இதழில் மலர்பற்றி மேலும் சில விவரங்களைத் தெரிவிக்கலாம் என்று எண்ணுகிறேன்.

ஆசிரியர்

# வீரனும் வீரனும்

'தம்பி'

அலெக்ஸாந்தரைப் பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். அவன் சிறு வயதிலேயே பெரு வீரனாகத் திகழ்ந்தான், உண்மையான வீரனுக்கு அழகு என்ன! தோற்றவனை விரட்டுவது அல்ல: தோற்றவன் வீரனானால் அந்த வீரத்தையும் மெச்சும் தன்மை உள்ளவனே சுத்த வீரன்.

அலெக்ஸாந்தர் இத்தகைய ஒரு சுத்த வீரன் என்பதை அவன் வாழ்க்கையில் நிகழ்ந்த மூன்று சம்பவங்களில் அறிகிறோம்.

உலகத்தை வெல்ல வேண்டும் என்ற ஆசையுடன் பெரும் திக்விஜயம் புரிந்த அலெக்ஸாந்தர் பால்கன் தேசங்களையும் எகிப்து, பாபிலோன், பலுச்சிஸ்தானம் முதலிய நாடுகளையும் வென்ற பிறகு இந்தியாவை அடைந்தான். ஸிந்து நதியைத் தாண்டி இந்திய அரசன் போரஸுடன் போரிட்டான். போரஸ் மற்றொரு பெரு வீரன். ஆயினும் போரில் தோற்றுச் சிறைப்பட்டான்.

தன் முன்னே விலங்கிட்டு அழைத்து வரப்பட்ட போரஸைக் கண்ட வீரன் அலெக்ஸாந்தர், ''வீரனே! இப்போது நீ என் கைதி. உன்னை எவ்வாறு நடத்த வேண்டும் என்று விரும்புகிறாய்?'' என்று கர்ஜித்துக் கேட்டான்.

சற்றும் தயங்காமல் பேசினான் வீரன் போரஸ்: ''ஒரு வீர மன்னனைப் போல் என்னை நடத்துக!''

ஒரு கணம் அலெக்ஸாந்தர் திடுக்கிட்டான். மறு கணம் ஓடி வந்து போரஸைத் தழுவி, ''நீயே வீரன்!'' என்று பாராட்டி



ஞன். கைவிலங்கை அவிழ்த்தான். போரஸை மீண்டும் மன்னனுக்கி அவனைத் தன் நண்பனுக்கினுன்.

பல கலைகளில் வல்லரான டையோஜினஸ் என்ற புலவரைப் பார்த்து வர ஒரு நாள் அலெக்ஸாந்தர் பரிவாரத்துடன் சென்ருன். அப்போது அம்மேதை சூரிய ஒளி தம்மேல் படும்படி படுத்துக் கொண்டிருந்தார். உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க அடிக்கடி அவ்வாறு சூரிய ஒளியில் படுப்பது அவர் வழக்கம்.

'அறிவில் சிறந்தவர் என்று டையோஜினஸை உலகம் போற்றுகிறது; நாமோ வீரத்தில் சிறந்தவன்' என்ற நினைவில் அவரோடு சரிசமமாகப் பேசத்தொடங்கினுன் அலெக்ஸாந்தர். தன் வீரப் பிரதாபங்களை அளந்துவிட்டு, "பெரியவரே! தங்களுக்கு எந்த உதவி வேண்டுமானுலும் கூறுங்கள். என்னுல் முடியாதது இல்லை. தங்களுக்கு என்ன வேண்டுமானுலும் செய்கிறேன்" என்ருன்.

நிம்மதியாக ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த பெரியவர் டையோஜினஸ் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். அலெக்ஸாந்தரின் தற்பெருமை ஓயவில்லை. ஆகவே அலெக்ஸாந்தர் இவ்வாறு கூறியவுடனே டையோஜினஸ், "அப்படியா அரசே, இப்போது நீங்கள் சற்றே இங்கிருந்து நகர்ந்தாலே எனக்குப் பெரிய உதவியா யிருக்கும். சூரிய ஒளி என் மேல் படும்" என்று பட்டெனச் சொன்ஞர். அலெக்ஸாந்தர் அதன் உட்பொருளை உடனே உணர்ந்தான். அறியாமையுடன் அப்பெரியவர் முன் தற்பெருமை பேசியதை நினைத்து வெட்கப் பட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

அலெக்ஸாந்தரின் நாட்டுக்கு அருகே கடலில் செல்லும் சில கப்பல்களைக் கொள்ளை யடித்ததாக ஒருவன் பிடிபட்டான். டையோமிடெஸ் என்னும் ஒரு கடல் திருடன் அலெக்ஸாந்தர் முன் விசாரணைக்குக் கொண்டு வரப் பட்டான்.

"எங்கள் வீரர் செல்லும் கப்பல்களை நீ கொள்ளையடித்தாயாமே?" என்று மிரட்டினுன் அலெக்ஸாந்தர்.

"ஆமாம்" என்ருன் அந்தத் துணிச்சல் மிக்க திருடன். மேலும், "தங்களைப் போல நானும் புகழடைய ஆசைப்பட்டேன், மகாராஜா!" என்ருன்.

"என்ன? என்னைப் போல் புகழடையவா? எப்படி?" என்று வியப்புடன் கேட்டான் மன்னன்.

கடல் - திருடன் பதிலளித்தான்: "ஐயா, தாங்கள் ஆளும் நாடு போதாது என்று வெளி நாடுகள் ஒவ்வொன்ருகத் திருடிக் கொண்டீர்கள். அதை 'வெற்றி' என்றும் 'ஜயக்கொடி' என்றும் சொல்லிக் கொண்டீர்கள். தங்கள் வெற்றிக்காக எத்தனையோ பேரைக் கொலை செய்தீர்கள். அந்தக் கொலையை வீரம் என்று கூறிக் கொள்கிறீர். நான் கொள்ளையடித்தது ஒன்றிரண்டு கப்பல்களையே. என்னுல் மக்கள் அடைந்த நஷ்டம் குறைவே. தங்களால் எத்தனை குடும்பங்கள் எவ்வளவு நஷ்டம் அடைந்திருக்கும்! ஆனுல் நான் திருடன், தாங்கள் வீரர். பெரும் திருடரான நீர் சின்னத் திருடனை என்னை விசாரிப்பது வேடிக்கையா யிருக்கிறது!" என்று துணிச்சலாகப் பேசினுன்.

அவனது துணிச்சலை மிகவும் பாராட்டினுன் அலெக்ஸாந்தர். அவனை விடுதலை செய்து, "இனி என் நாட்டுக்கு அருகே நடமாடாதே" என்று சொல்லி அனுப்பி விட்டான்.

போரஸ், டையோஜினஸ், டையோமிடெஸ் மூவரையும் இஷ்டமிருந்தால் தண்டித்திருப்பான் அலெக்ஸாந்தர். அதற்கு ஏற்ற வாய்ப்பும் பதவியும் இருந்தும், அவர்களுடைய துணிச்சலையும் வீரத்தையும் மெச்சிய அலெக்ஸாந்தர் ஓர் உண்மை வீரன் என்பதில் என்ன சந்தேகம்?



ஆர்வி

சீனனும் ஷங்கங்கும் ஏறிச் சென்ற வண்டி காற்றினும் கடிய வேகத்தில்தான் சென்றது. ஆனால் அதே சமயத்தில் பின்னால் தொடர்ந்து வந்த வண்டியும் அந்த ஓட்டத்துக்கு ஏற்ப வந்துகொண்டிருந்தது.

எனவே பின்னால் வந்த வண்டி அவர்களுடைய வண்டியைத் தொடர்ந்து வந்ததுதான் என்பதில் சந்தேகமேயில்லை. வீணாக எழும்பூர், நுங்கம்பாக்கம் என்று சுற்றி, பெட்ரோலைச் செலவழித்ததுதான் கண்ட பலன். முதலிலேயே வழியோடு போயிருந்தால் கிங்கிங் இன்னொரு டாக்ஸியைத் தேடி, ஏறி உட்கார்ந்து, பின்பற்றி வருவதற்குள் கண்ணில் படாமல் போயே போய் இருக்கலாம்.

சீனன் பார்த்தான். ''சரி; டிரைவர்! வண்டியை எங்க சாபரிடம் கொடு!'' என்றான். பிறகு சாபரைப் பார்த்து, ''நீ போய் ஓட்டப்பா! பின்னால் துரத்திக்கொண்டு வரும் காருக்கு எப்படி டிமிக்கி கொடுப்பாயோ, எனக்குத் தெரியாது. ஷங்கங்! உன் மூளைக்குக் கொஞ்சம் வேலை கொடுத்து, சாபருக்கு யோசனை சொல், பார்க்கலாம்!'' என்றான்.

ஏதாவது உடனே செய்தாக வேண்டிய அவசியம் எல்லாருக்கும் புலப்பட்டது. வண்டி, கிண்டி மேம்பாலத்தின் ஏற்றத்தில் போய்க்கொண்டிருந்தது. வண்டியை நிறுத்தாமலே டிரைவர் ஸ்டியரிங் வளையத்தைச் சாபரிடம் விட்டு விட்டு, இடது புறமாக வந்து உட்கார்ந்தான்.

திடீரென்று ஷங்கங்குக்கு ஒரு யோசனை உதித்தது. ''சாபர்! வண்டியை 'லெப்டு'லே ஒடிச்சுத் திருப்பு!'' என்றான். சாலை அங்கே இரண்டு பிரிவுகளாகச் சென்றது. ஒன்று பெரிய சாலை. மற்றொன்று, ராஜபவனம் செல்வது. அந்த இரண்டாவது பிரிவில் வண்டி திரும்பியது. அந்த இடம் வளைவாக இருந்ததால், அவன் எதிர்பார்த்தபடியே பின்னால் வந்த வண்டி அவர்கள் வண்டியைத் தொடரவில்லை. அது நேராகப் பெரிய சாலையிலேயே ஓடத் தொடங்கியது. இறக்கத்தில் இவர்களுடைய முன் வண்டி எந்தப் பக்கமாகப் போயிற்று என்பதைப் பின்னால் வந்த டாக்ஸி டிரைவரால் தெரிந்துகொண்டிருக்க முடியாது. ஆகவே அது வளைந்து சென்ற சாலையிலே மேம்பாலத்தைத் தாண்டிச் சென்றது.

''எப்படி சீனா, நம்ப பிளான்?'' என்றான் ஷங்கங்.

''அதுக்குள்ளேயே சர்டிபிகேட்டை எதிர்பார்க்கிருயா? முந்தி ஊரைச் சுற்றிக்கொண்டு வரச் சொல்லி யோசனை சொன்னேன்! ஆனல் அது நடக்கல்லே. இப்ப எப்படி ஆகப்போகிறதோ, பார்க்கலாம் அப்புறம்!'' என்றான் சீனன்.

சீனனுக்கு நாலு நாளைக்குள் பெரிய மனிதப் பேச்செல்லாம், அகப்பட்டுக் கொள்ளாதபடி பாராட்டுவதற்கெல்லாம் வந்துவிட்டதாக ஷங்கங் எண்ணினன்.

இந்தத் தடவை அவர்கள் சமாளித்து விட்டதாகவே தோன்றியது. அவர்களைக் கடந்து சென்ற வண்டி வெகுதூரம் முன்னல் போய்விட்டது. அதனுடைய சிவப்பு விளக்கு, பறங்கிமலை செல்லும் அந்த வளைந்த ரஸ்தாவில் புள்ளியாகச் சிறுத்து, கடைசியில் அதுவும் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டது.

இவர்களுடைய வண்டி நிதானமாகத் திரும்பி, குறித்த இடத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. இவர்களுடன் வந்த டிரைவர் அந்தப் பங்களாவுக்குச் செல்லும் வழியைச் சொல்லிக்கொண்டு வந்தான். பங்களா, மலைக்குச் செல்லும் அழகிய சாலையில், தூரத்தில் வரும்போதே பார்வையில் படும்படி அமைந்திருந்தது. தூரத்திலிருந்து பார்த்தால் மலையின் இடைப்பாகத்தில், உயரத்தில் இருப்பதுபோல் காட்சியளித்தது அது. ஆனல் போகப் போகத்தான் ஊரும், அதிலுள்ள வீடுகளும் மலையின் மேட்டுப் பாங்கான சரிவில் இருப்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

கிழவருடைய பறங்கிமலைப் பங்களா தனியாகவும், மற்றப் பங்களாக்களைவிடப் பெரிதாகவும் அழகாகவும் தோற்றமளித்தது. மேல் உச்சியில் இருந்த செயின்ட் தாமஸ் மாதாகோயிலும், கீழ்ப்பகுதியில் கிழவருடைய பங்களாவும் அந்த மலைக்கே ஓர் அழகைக் கொடுத்துக்கொண்டிருந்தன.

இதையெல்லாம் பார்த்ததும் சீனனுக்கு ஒன்றும் உண்மையில் நடப்பது போலவே தோன்ற



வில்லை. ஏதோ ஓர் அதிசயக் கனவில் நிகழ்வதுமாதிரிதான் தோன்றியது. அந்த வெள்ளை மாளிகைக்கு அவன்தான் எஜமானன், உரியவன் என்று பதினைந்து நாட்களுக்குமுன் எவனுவது ஜோஸ்யம் சொல்லியிருந்தால்.. அவனைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் அனுப்பியிருப்பார்கள். ஆனல் இன்று அதுவே நடந்திருக்கும்போது, இந்த அதிசயத்தை எப்படி நம்புவது? நினைக்க நினைக்க அவனுலேயே நம்ப முடியவில்லை. ஷங்கங்குக் கூடத் தெரியாமல் இது நிஜமா, சொப்பனமா என்று தன்னுடைய தொடையில் தானே கிள்ளிப் பார்த்துக்கொண்டான்.

வண்டி வெகு சொகுஸாக நிலவில் ஏரியிலே மிதந்து வரும் படகைப்போல, நளினமாகச் சென்றுகொண்டிருந்தது. ஆயிற்று, அந்த வளைவு திரும்பி மேல்புறமாக ஏறினல் பறங்கிமலைப் பங்களாவின் முன் கிராதி தெரியும். ஆனல் அதற்குள் சுற்றிலும் இருக்கும் காட்சிகளைப் பார்த்துக்கொண்டு வந்த சீனனுடைய கண்களில் பங்களாவின் வெளி மதில் பக்கத்திலே, இடதுபுறத்து மறைவில்



இருந்த மரங்களும் அதன் நிழலிருட்டிலே நின்ற ஒரு சிறிய வண்டியும் கண்களில் பட்டன.

ரோடு ஏற்றமாக இருந்ததால் வண்டி மெதுவாகத்தான் வந்து கொண்டிருந்தது. அதனுல் சீனன் கதவு ஓரமாக வெளியில் தலையை நீட்டி, அந்த வண்டியில் யார் வந்திருக்கிருர்கள் என்று பார்த்தான். அதனுள் ஓர் ஆள் இருப்பது தெரிந்தது. இந்த வண்டியைக் கண்டதும் அந்த வண்டி, 'குர்' என்று புறப்படும் சத்தம் கூட அந்த அமைதி சூழ்ந்த இரவில் கேட்டது. 'யாரோ, என்னவோ, நமக்கு என்ன?' என்று திரும்ப நினைத்த சீனனுடைய கண்களில்-ஆம்; திகைப்பையும் பிரமிப்பையும் கலந்து ஊட்டும்-அந்தக் காட்சி தென்பட்டது.

பறங்கிமலைப் பங்களாவில் உயர்ந்த வெள்ளைச் சுவரில், அதன் உயரத்துக்குப் பொருத்தியிருந்த கறுப்பு இரும்புக் குழாயைப் பிடித்துக்கொண்டு யாரோ ஓர் ஆள், கிளைக்குக் கிளை தாவும் குரங்கின் பயமற்ற லாகவத்தோடு ஏறிக்கொண்டிருந்தான். அவனைத் தவிர மற்றவர்கள் அந்தக் காட்சியைக் கவனித்ததாகத் தெரியவில்லை. பக்கத்தில் இருந்த ஷங்கங்கூட, ''சலாம் பாபு, சலாம் பாபு!'' என்று ஷோக்காகப் பாடிக்கொண்டிருந்தான். அவனுக்கு எப்போதுமே இந்தச் சினிமாப் பைத்தியம் எல்லாம் உண்டு. எப்படியாவது ஒரு தடவையாவது, ஒரு நாளாவது அந்தச் சினிமாவில் சேர்ந்து, ஒரு நிமிஷமாவது நடித்துவிட வேண்டும் என்று அவனுக்கு ஓர் ஆசை இருந்தது. அந்த ஆசை இன்றில்லாவிட்டால் என்ருவது ஒரு நாள் நிறைவேறத்தான் போகிறது என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது. காரணம், அவனுக்கு இருந்த இனிய சாரீரம்தான். அந்த இனிமையையெல்லாம் அவன் இவ்வளவு நாளும் பிளாட்பாரத்தில் பாடியே வீணுக அடித்துவிட்டான். இனி அவனுக்கு என்ன கவலை? அவனுடைய உயிரினும் மேலான

தோழனுக்கு அடித்திருக்கிற யோகம் அவனுக்கே அடித்த யோகம் மாதிரிதானே! அந்தக் குதூகலத்தில் அவன், 'சலாம் பாபு!' பாடிக்கொண்டிருந்தான். அவனைக் கூப்பிட்டு, ''அதோ பாரடா!'' என்று சீனன் சொல்லிக் காட்டுவதற்குள் வண்டி பங்களாவின் பக்கத்து மதிலைக் கடந்து முகப்பை நெருங்கிவிட்டது. வாசலில் அந்த காவற்காரன் தயாராக, விறைப்பாக, கையில் சிறு தடியுடன் புது எஜமானனை வரவேற்கக் காத்திருந்தான்.

அலுமினியப் பெயின்ட் அடித்த இரும்புக் கிராதி வெள்ளிக் கம்பிகளை வைத்துக் கட்டியதுபோல் பளபளத்தன. பங்களாவின் முன்புறமெங்கும் தேஜோமயமாக விளக்குகள் எரிந்து, பங்களாவின் தோற்றத்தை மிகைப்படுத்திக் காட்டின. வெளி மதிலுக்கும் உள்ளேயிருந்த முகப்புக்கும் இடையிலே அழகழகான செடிகள், மரங்கள் பூத்துக் குலுங்கின. நடுநடுவே நீல நிற விளக்குகள், குளிர்ந்த நிலவுபோல ஒளி வீசிக்கொண் டிருந்தன.

சலவைக் கல் மேடைகளும், சாய்மானங்களும் வெல்வெட் மெத்தை விரித்ததுபோன்ற மரகதப் பச்சைப் பசும் புல்தரையும், செயற்கை ஊற்றும், வர்ணஜாலம் புரியும் பல வண்ணக் கதிர்களும் இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்போல இருந்தன. பூலோகத்திலிருந்து திடீரென்று அமரலோகத்தினுள் வந்து நுழைந்துவிட்ட திக்பிரமை தான் யாருக்கும் வந்து நுழைந்தவுடன் உண்டாகும். ஷங்கங்குக்கு அப்படித்தான் இருந்தது. சட்டென்று அவன் பாட்டு ஒலி பரப்புவதை நிறுத்தியதிலிருந்தே அது மிக நன்றாகத் தெரிந்தது.

ஆனால் வண்டி முகப்பு மண்டபத்தினுள் வந்து ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டு நின்றதுமே, சீனன் ஒரே பாய்ச்சலில் கதவைத் திறந்துகொண்டு வெளியில் பாய்ந்தான். காவல் பார்த்து வந்த அந்த ஆளைப் பார்த்து அவன், ''இந்தாப்பா! சட்டுனு பாரிஸ்டருக்குப் போன் போடு!'' என்று அவனுக்கு முன்னால் போகத் தொடங்கினான்.

நல்லகாலம்; போன் கீழே உள்ள அறை ஒன்றில்தான் இருந்தது. இரண்டு நிமிஷங்கள்கூட ஆகியிருக்காது. பாரிஸ்டரோடு தொடர்பு கிடைத்துவிட்டது. அவனுடைய சுறுசுறுப்பையும் அழகான தோற்றத்தையும் பார்த்து ரசித்துக்கொண்டிருந்த வாட்சுமேனை அவன் ஒரு விரலால் சைகை காட்டி வெளியில் காத்திருக்கச் சொன்னான்.

மேலும் அவன் இரண்டு நிமிஷங்கள்தான் டெலிபோனில் பேசியிருப்பான்! சட்டென்று வெளியில் வந்து, ''இந்தாப்பா வாட்சுமான்! நேரே வண்டியிலேறி, பக்கத்திலிருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்குப் போ!'' என்று உத்தரவு கொடுத்தான்.

ஷங்கங்குக்கூட இந்த விசித்திரமான நடத்தைக்கும் உத்தரவுக்கும் பொருள் விளங்கவில்லை. வண்டியை அனுப்பிவிட்டு அவன் ஷங்கங்கோடு நீருற்றுப் படிக்கட்டில் வந்து உட்கார்ந்தான். விவரம் புரியாது விழிக்கும் ஷங்கங்கைப் பார்த்து, ''ஒண்ணும் புரியல்லியா, உனக்கு? உனக்கு எப்படிப் புரியும்? நீதான் பாபுவுக்குச் சலாம் போட்டுக்கொண் டிருந்தாயே!'' என்றான்.

அப்பொழுது ஷங்கங் எதுவும் விளங்காமல் திகைக்கவே, ''உன் பிளான் எப்படி என்று கேட்டியே, அதைவிட அவன் பிளான் ஒரு படி மேலேயே போயிட்டுது!'' என்றான்.

''எது, எது?''

''அதான் அந்தச் சப்பை மூக்குச் சீனாக்காரன் பிளானைச் சொல்றேன்!''

''யாரு, கிங்கிங்கையா சொல்றே?''

''உஸ்; சத்தம் போடாதே! அவனை ஏய்த்துவிட்டு வந்ததாக நாம் எண்ணிச் சந்தோஷப்பட்டுக் கொண்டு வந்தோமே, அவன் நம்மை டபாய்த்துவிட்டு, நமக்கு முன்னே இங்கே வந்து, நம்மை விட ரொம்ப தூரம் உயரவே

போய்விட்டான்!'' என்று மேலே கையைத் தூக்கிக் காட்டினுன். சீனன் அவனுக்கு, தான் சற்று முன் கண்டதை, விளக்கி விரிவாகச் சொல்லவேண்டியிருந்தது.

''அதான் போலீஸுக்குப் போன் பண்ணினியா?'' என்று அடித் தொண்டையில் ரகசியமாகக் கேட்டான் ஷங்கங்.

''இல்லே; பாரிஸ்டர் வேதாசலத்துக்குப் போன் பண்ணினேன். அவர் அங்கிருந்து போலீசுக்குத் தகவல் கொடுப்பார். பிறகு இந்த ஊர்ப் போலீஸ் ஸ்டேஷனுக்கு உடனே தகவல் கிடைத்து விடும். எதற்கும் வண்டியை அனுப்பினுல் அங்கிருந்து உடனே உதவி ஏதாவது கிடைக்குமாம். அதற்குத்தான் வண்டி போயிருக்கிறது!'' என்று கூறினுன் சீனன்.

''டேய் சீனு!''

''என்ன?''

''நீ திடீர்னு பணக்காரனு ஆயிட்டேன்னு மட்டுமே நினைச்சேன்-''

''உம்....''

''நீ திடீர்னு பெரிய மேதாவியாகவும் ஆயிட்டேடா!''

''ஓகோ!'' என்று அவன் சொல்வதற்குள் ஷங்கங் அவனைக் கட்டிக்கொண்டு, முதுகில் ஓங்கி ஓங்கித் தட்டினுன்.

''சர்ர்....ர்....''

போன வண்டி நீருற்றைச் சுற்றிக்கொண்டு சத்தப்படாமல் வந்து 'சர்'ரென்று அவர்களுக்கு எதிரே நின்றது. தொப தொபவென்று நாலைந்து போலீஸ் வீரர்கள் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக இறங்கினுர்கள். சீனன் உடனே அவர்கள் எதிரில் போய், ''இடது புறத்துக் குழாய் வழியாக!'' என்று கையைக் காட்டிக் கூறினுன்.

அவர்களில் தலைமையாக இருந்தவன் இரண்டு பேரை உள் பக்கமாகப் போகச் சொல்லிவிட்டு, இன்னும் இரண்டு பேரை அழைத்துக்கொண்டு, சீனன் காட்டிய திசையில் சென்ருன்.

அரை மணிக்கெல்லாம் ஒரு போலீஸ் வானே வாசலில் நுழைந்து வந்தது. ''மாஸ்டர் சீனன் யாரு, தம்பி? எங்கே இருக்கார் அவர்?'' என்ருர் இன்ஸ்பெக்டர்.

சீனன் எழுந்து நின்று, ''நான் தான்!'' என்ருன்.

''நீங்களா? ரொம்பச் சந்தோஷம்! எல்லாம் தகவல் கிடைச்சுது. ஆனுல் ஒன்றுமே கவலைப் படாதீங்க-ஆளை அப்படியே பிடிச்சுக் கொண்டாந்து உள்ளே தள்ளிடறேன். முந்தி வந்தவங்கள்ளாம் எங்கே?'' என்று படபடப்போடு கேட்டார்.

''உள்ளேதான் போயிருக்காங்க. அரைமணி ஆச்சு. தகவல் தெரியல்லே. நாங்க அவங்களுக்காகத்தான் இங்கே காத்திருக்கோம்' என்ருன் ஷங்கங்.

அந்தச் சமயத்தில் தலைமைப் போலீஸ்காரன் வேர்க்க விறுவிறுக்க வெளியில் வந்தான். இன்ஸ்பெக்டரைக் கண்டு, தடால் என்று காலை இடித்துக்கொண்டு ஒரு போலீஸ் சல்யூட் அடித்தான். பிறகு, கிட்டே வந்து, ''ஒரு இடம் பாக்கியில்லாமெ 'ஸர்ச்' போட்டுப் புட்டோம்! யாரையும் காணும்! தம்பி சும்மா ஏதோ நிழலைப் பார்த்துப்புட்டு அருண்டுட்டுது போலிருக்கு!'' என்ருன்.

''இல்லே; ஆள் ஏறினதை என் கண்ணுல் பார்த்தேன்!''

''இன்னும் யார் யார் பார்த்திங்க?'' என்ருர் இன்ஸ்பெக்டர்.

''வேறே யாரும் கவனிக்கல்லே''

''அப்ப சரிதான்; ஏதோ ஒரு பிரமையாகத்தான்....'' என்று சிரிக்கத் தொடங்கிய இன்ஸ்பெக்டர் பேச்சை முடிக்கவில்லை.

''மதிலுக்கு வெளியிலேதான் அந்த டாக்ஸி நின்றது!'' என்ருன் சீனன்.

எல்லாரும் அவசர அவசரமாக டாக்ஸி நின்ற மரத்தடியை, மதில் ஏறிப் பார்த்தார்கள். இன்ஸ்பெக்டர் டார்ச்சு விளக்கை அடித்துக் கூடப் பார்த்தார். மரங்கள்தான் இருந்தன. டாக்ஸியை காணும்.

''நான் என் கண்ணுல் பார்த்தேன்!'' என்று சீனன் சொல்லச் சொல்ல, இன்ஸ்பெக்டர் உதட்டைப் பிதுக்கிக்கொண்டே இருந்தார். (தொடரும்)




பிஸ்கட் வாங்கிடுவாய்—தம்பி
பிஸ்கட் வாங்கிடுவாய்.
பிஸ்கட் வாங்கிடுவாய்—தங்காய்
பிஸ்கட் வாங்கிடுவாய்.

ஒஸ்தி யாகச் செய்த பிஸ்கட்
உடம்புக் கேற்ற நல்ல பிஸ்கட்.
குஸ்தி போடும் பயில்வா னுக்கும்
குஷிய ளித்து வீர மூட்டும் (பிஸ்)

குறைந்த விலையில் கிடைக்கும் பிஸ்கட்
குழந்தை யெல்லாம் விரும்பும் பிஸ்கட்
விரைந்து ஓடி வந்தா லன்றி
விற்றுப் போகும், சொல்லி விட்டேன் (பிஸ்)

கரடி, சிங்கம், புலியை யெல்லாம்
காண லாமே நம்மி டத்தில்.
பிரள வேண்டாம்! உள்ளே தள்ளி
மென்று தின்று வீர ராக (பிஸ்)

பிச்சை எடுத்துப் பிழைக்க வில்லை.
பிறரை ஏய்த்துத் திருட வில்லை.
இச்சை யோடு பாடு பட்டு
இந்த நானும் விற்கும் இந்த - (பிஸ்)

# அனாதைக்கு ஆதரவு

சம்பந்தம்

தெனாலிராமன் வீட்டுக்குள் இருந்து கொண்டே, தன் மனைவியையும் தாயையும் அரண்மனைக்கு அனுப்பி அரசனிடம் முறையிடச் சொன்னான்.

அப்படியே அவர்கள் கண்ணீரும் கம்பலையுமாகச் சென்று அரசன் முன்னிலையில் நின்றார்கள். ''நீங்கள் யார்? உங்களுக்கு என்ன நேர்ந்தது?'' என்று பரிவுடன் விசாரித்தான் அரசன்.

''அரசே! ஏதோ சிறு குற்றம் செய்ததற்காக இப்படி என் மகன் தெனாலிராமனின் தலையை வாங்கச் சொல்லிவிட்டீர்களே! இனிமேல் என்னைக் காப்பாற்ற யார் இருக்கிறார்கள்?'' என்று ராமனின் தாய்தான் முதலில் 'கோ'வெனக் கதறினாள்.

''அரசே! இந்த இளம் பாலகன் முகத்தைப் பாருங்கள்!'' என்று தன் இடுப்பிலிருந்த பையனைக் காட்டி அழுதாள் மனைவி மங்கமாள். ''ஐயோ! எங்களை இப்படி நடுத்தெருவில் விட்டுப் போய் விட்டாரே'' என்று தலையிலும் அடித்துக்கொண்டாள்.

அவர்களைக் கண்டு மிகவும் பரிதாபப்பட்டான் அரசன். ''நடந்தது நடந்துவிட்டது. அதற்காக வருந்துவதால் பயன் என்ன?'' என்றான். ''அரசே, ஆதரவிழந்த நாங்கள் எப்படி உயிர் வாழ்வது! தயவு செய்து எங்கள் தலையையும் வாங்கிவிடச் சொல்லுங்கள்'' என்று இருவரும் ஒரே குரலில் கெஞ்சி அழுதார்கள். மன்னன் மனம் கரைந்தது. ''சரி, இனிமேல்



உங்களுக்கு மாதம் மாதம் இருபது பொன் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன். அதை வைத்துக்கொண்டு பிழையுங்கள்'' என்று அவர்களை அனுப்பி வைத்தான் அரசன்.

நடந்தவற்றைத் தெனுலிராமனிடம் சொல்லி இருவரும் சந்தோஷப்பட்டார்கள். ''அப்படியென்ருல் அன்று அந்தச் சேவகர்களுக்குக் கொடுத்த தொகை, நமக்கு ஒரு மாதத்திலேயே கிடைத்துவிட்டதே'' என்று சொல்லி, தெனுலிராமனும் சந்தோஷப்பட்டான்.

தெனுலிராமன் கொலையுண்ட செய்தி ஒரு நொடியில் காட்டுத்தீபோல் எங்கும் பரவியது. 'இப்படியும் உண்டா? எங்கேயாகிலும் ஓர் அந்தணரைக் கொல்வார்களா! இதனுல் இந்த அரசாங்கத்துக்கு என்ன தீங்கு நேருமோ!' என்று மக்களனைவரும் பேசத் தொடங்கினுர்கள்.

இந்தச் செய்தி வெகு தூரம் சென்று அரண்மனை அந்தப்புரத்திலிருந்த அரசிகள் காதுவரை எட்டியது. அவர்கள் பயந்தே போனுர்கள். உடனே தெனுலிராமனின் ஆத்ம சாந்திக்கு ஏதாவது பிராயச்சித்தம் செய்தாக வேண்டும் என்று அரசனிடம் முறையிட்டுக்கொண்டார்கள்.

அரசனும் யோசித்தான். ஏதோ சாந்தி செய்துவிடுவது நல்லதுதான் என்று அவனுக்கும் பட்டது. உடனே ராஜகுருவைக் கூப்பிட்டனுப்பினுன். ''அகால மரணத்தினுல் தெனுலிராமனின் ஆத்மா அலைந்துகொண்டிருக்கும். அதனுல் நாளைய அமாவாசை நள்ளிரவில் மயானத்திலுள்ள ஆலமரத்தினடியில் அவன் ஆத்ம சாந்திக்கான பூஜையைச் செய்து முடித்துவிடுங்கள்'' என்று கட்டளையிட்டான் அரசன். ''அமாவாசை நள்ளிரவிலா!'' என்று ராஜகுரு சற்றுத் தயங்கியபொழுது, ''சரி, உதவிக்காக அரண்மனைப் புரோகிதர்களையும் அழைத்துக்கொண்டு செல்லுங்கள்'' என்ருன் அரசன். ''சரி அப்படியே ஆகட்டும்'' என்று சொன்னுரே யொழிய, ராஜகுருவுக்கு உள்ளூறச் சங்கடமாகத்தானிருந்தது. நடு ராத்திரியில் மயானத்துக்குப் போக யாருக்குத்தான் பிரியமாகயிருக்கும்! 'தெனுலிராமன் உயிருடன் இருந்தபோதுதான் தொல்லை என்ருல் இறந்து போயும் அவன் உபத்திரவம் நம்மை விட்டபாடில்லையே!' என்று ஏங்கினுர் ராஜகுரு.

(அடுத்த இதழில் தெனுலிராமன் திரும்பி வருகிருன்)

---

## பொழுது போக்கு

என் அண்ணன் என்னைப் பார்த்து, ''எட்டுத் தீக்குச்சிகளைக் கொண்டு நாலு முக்கோணங்களும் இரண்டு சதுரங்களும் நான் வரவழைக்கிறேன். அதுபோல் உன்னுல் செய்ய முடியுமா?'' என்று கேட்டான். ''இது ஒருகாலும் முடியாது'' என்றேன் நான். அவன் செய்து காண்பித்துவிட்டான். அப்போதுதான் தெரிந்தது, நானும் முயற்சி செய்திருந்தால் அது ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல என்று. எங்கே, நீங்கள் முயன்று பார்த்துச் சொல்லுங்கள் 'சுலபமா, கஷ்டமா?' என்று.

விடை: 36-ஆவது பக்கம்.

# தன்மதிப்பு

சங்கரசுப்பு

"ஒரு சமயம் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆப்ரஹாம் லிங்கன் தம்முடைய ஜோடுகளுக்குப் 'பாலிஷ்' போட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவரைக் காண வந்த நண்பரொருவர் லிங்கன் செய்துகொண் டிருந்த காரியத்தைப் பார்த்ததும், வியந்து, ''இதென்ன ஸார், உங்கள் ஜோடுகளுக்கு நீங்களே 'பாலிஷ்' போடுகிறீர்கள்?'' என்று கேட்டார். ஜனாதிபதியாக இருக்கும் ஒருவன் தன் ஜோடுகளுக்குப் பாலிஷ் போடுவது அகௌரவமான காரியம் என்ற எண்ணத்தோடு கேட்ட கேள்வியை லிங்கன் புரிந்து கொண்டார். தன் காரியத்தைத் தானே செய்து கொள்வது அகௌரவமாகாது, தன் மதிப்புக்குக் குறைவாகாது என்பதைத் தம் நண்பருக்கு உணர்த்த விரும்பி, ''ஆமாம். நான் என் பூட் ஸுகளுக்குப் பாலிஷ் போடுகிறேன்: நீங்கள் யார் ஜோடுகளுக்குப் பாலிஷ் போடுவீர்கள்?'' என்று வினவினாராம். லிங்கனிடம் போய் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டு மூக்கை உடைத்துக்கொண்டோமே என்று வெட்கித் தலைகுனிந்தார் நண்பர்.

மேலே சொன்ன செய்தி தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியிருந்தது. அதை நான் படித்து முடித்ததும்,-

''சாம்ராஜ்..சாம்ராஜ்..'' என்று வாசலிலிருந்து குரல் வந்ததும் சரியாக நேர்ந்தது.

''வந்துட்டாங்கய்யா காலங்காலையில் இழுத்துக்கொண்டு போக..'' என்று கூடத்தைப் பெருக்கிக்கொண் டிருந்த அம்மா சற்றுப் பலமாகவே தன் அலுப்பைத் தெரிவிப்பதுபோல் சொன்னாள்.

தலையைச் சீவிக்கொண் டிருந்த அப்பா கண்ணாடியினுள்ளேயே அம்மாவை எரித்து விடுவதுபோல் பார்த்தார்.

''இரும், ஓய்..இதோ வந்து விட்டேன்'' என்று வெளியிலிருந்து வந்த குரலுக்குப் பதில் கொடுத்தார்.

கொஞ்ச நேரத்திற்குமுன் மேஜை மீது வண்ணான் கொண்டு வைத்திருந்த உருப்படிகளிலிருந்து ஒரு ஜிப்பாவை உருவி எடுத்து அதனுள் வேகமாகப் புகுந்துகொண்டார். நான் கையிலிருந்த பத்திரிகையை மேஜைமேல் வைத்துவிட்டு, உள்ளே மர அலமாரியில் இருந்த என் செருப்பையும், அப்பாவின் ஜோடுகளையும், கையில் எடுத்துவந்து நடையில் போட்டேன்.

''ஏய்....நான் வெளியிலே போறேன். வண்ணான் வந்தான்னா அழுக்கை எடுத்துக் கணக்குப் பார்த்துப் போட்டு எழுதிவை, என்ன?'' என்று அம்மாவிடம் சொல்லிக்கொண்டே ஜோடுகளைக் காலில் அணிந்துகொண்டார்.

அம்மா பதிலைத் தயாராக வைத்திருந்தது போல், ''எனக்கு ஒழியாது'' என்று சொன்னாள். அம்மாவின் பதில் அப்பாவுக்கு எப்படிப் பட்டதோ தெரியவில்லை; கால்களிலிருந்த செருப்பை வெகு வேகமாகக் கழற்றி எறிந்து விட்டு, அம்மா இருந்த திசை நோக்கிப் போனார்.

பளீர் என்று அறைந்த சப்தம் கேட்டது. ''ஒழியாதா? உனக்கு எதற்கு ஒழியும்? சொல், தெரிஞ்சுக்கறேன். ஒழியாதா? ஒழியாதுன்னா இங்கே வேறென்ன கழற்றப் போறே?'' என்று பொரிந்து விட்டு வெளியே வந்தார் அப்பா.

வாசலில் நின்ற நண்பரிடம், ''வாரும் போகலாம்'' என்று கூறிக்கொண்டே கிளம்பினார். அப்பா வாசலை மிதித்ததும், முதுகில் அறைவது போல் வாசல் கதவைப் படீர் என்று சாத்தினாள்

அம்மா. உடனே அப்பா, ''இரும் ஓய், இதோ வந்து விட்டேன்'' என்று நண்பரிடம் சொல்லிவிட்டு, கோபம் முகத்தில் சிவப்பைக் கக்க, கதவைத் தட்டினர்.

கதவு திறந்தது. திறந்தவுடன் உள்ளே நுழைந்து,''உனக்கென்ன அவ்வளவு? வண்ணனுக்கு எடுத்துப் போடுன்னு வந்து டுத்தா வல்லடி..?'' என்று கூறிவிட்டு இன்னும் இரண்டு அறை கொடுத்து விட்டு, கையை உதறிக்கொண்டு வெளியே வந்தார் அப்பா. அவர் கையைப் பார்த்தேன். 'மருதாணி' அறைத்த கைமாதிரி சிவந்திருந்தது.

அப்பாவின் நண்பர் நரஸிம்ம பொட்டி சற்றுப் பவ்வியமாக, ''என்ன சார்..விஷயம் ஒன்றுமில்லே. இதற்குப் போய்..'' என்று இழுத்தார்.

'உங்கள் வீட்டு விஷயத்தை நான் புரிந்து கொண்டுவிட்டேன்' என்று கௌளி சொல்வதுபோல் சொன்னர். அவர் புத்தியை அப்பா பாராட்டுவார் என்று எண்ணிக் கொண்டு சொன்னரோ என்னவோ! அப்பா சூடாக, ''என்ன ஒன்றுமில்லே..? வண்ணனுக்கு அழுக்கை எடுத்துப்போட்டு, கணக்கு எழுதுன்னேன். ஒழியாதாம் அவளுக்கு. எத்தனே ஆணவம் இருக்கணும்? கட்டின புருஷன் துணியை எடுத்துப்போட ஒழியல்லேன்னு அவளுக்கு அப்புறம் எதற்குத்தான் நேரமிருக்கும்?'' என்று கேட்டார்.

''ஹூம்....நீங்களே எடுத்துப் போட்டு எழுதி விட்டு வந்திருக்கலாம். என்ன பிரமாதம்! இரண்டு நிமிஷம் ஆகப்போகிறது!''

''அது வேறு விஷயம், நான் சொல்லிக் கேட்கலேன்னு அப்புறம் இவள் என்ன 'ஒய்ப்' சார்? ஆமாம், நீர் என்ன என் மைத்துனன் போல் பரிந்து பேசுகிறீர்?''

அப்பாவின் நண்பர் அதற்குமேல் பதில் சொல்லவில்லே.

* * *

**நா**ங்கள் போனபோது அப்பாவின் நண்பர் சுதர்சனம் காலேத் தினசரியைப் புரட்டிக்கொண்டிருந்தார். அதைவிடத் தினசரியில் அவர் புரண்டுகொண் டிருந்தார் என்று சொன்னல் அவர் அப்போது உண்மையாகச் செய்துகொண்டிருந்தைத் தத்ரூபமாகச் சொன்னதாகும்.

''வாருங்கள்....வாருங்கள்.. ஏதேது காலங் காலேயில் வந்தீர்கள்?'' என்று பேப்பரில் புரண்டு



கொண்டிருந்த சுதர்சனம் எழுந்து வரவேற்றார்.

''ஞாயிற்றுக் கிழமை அன்று தானே பெருமாளைக் காணலாம். அதுவும் காலையில் பத்து மணிக்கு முன்னால் வந்தால்தானே!''

''என்ன விசேஷம்?''

''விசேஷம்தான். வெறுமே வரவில்லை'' என்றார் அப்பா.

''நீங்கள்தான் வெறுமே வர மாட்டீர்களே!''

''இங்கே பாரும். நான் எப் போதும் வெளிப்படையாகப் பேசு கிறவன். ஒளி மறைவு கிடையாது என்னிடம். ஒருவன் இன்னொருவ னிடம் எதற்காக ஒன்றுமில்லாமல் வெறுமே போக வேண்டும்? காரியம் இருந்தால்தான் போக வேண்டும். காரியார்த்தமாகச் சென்று விட்டு, 'சும்மாத்தான் வந்தேன்' என்று இளித்துவிட்டு, பிறகு வந்த காரியத்தைச் சொல் வதைவிட, சென்ற உடனேயே நறுக்கென்று காரியத்தைச் சொல் வதைத்தான் நான் விரும்புவேன். அதுதான் நல்லது'' என்று சொன்னார் அப்பா.

சுதர்சனம் அலிகார் பூட்டுப் போல் சிரித்தார். நரஸிம்ம பொட்டி புன்னகை புரிந்தார். அப்பா ஏதோ பெரிய முத்தை உதிர்த்துவிட்டது போல் பெரு மிதத்தோடு கனைத்தார்.

''சரி, காரியமாகவே வாருங்கள். இங்கே யிருந்து போகும்போதும் வேறு ஏதாவது காரியமாகவே போங்கள். ஐயர்வாள் இன்னிக்கி இங்கே சும்மா வரலை. ஏதோ காரிய மாக வந்திருக்கிறார். என்ன காரியம்னு நான் தெரிந்து கொள்ள லாமா?'' என்று கேட் டார் சுதர்சனம்.



''தெரிவிக்கத்தானே வந்திருக்கிறேன். கிரா மணியார் தெருவிலே தெற்குப் பார்த்த வீடு ஒன்று காலியாயிருப்ப தாக இரண்டு நாள் முன்பு ஆராவமுதனிடம் சொன்னீராமே, வாஸ் தவமா? இப்போதும் காலியாகவே இருக் கிறதா?''

''ஆஹா, வாஸ்தவம் தான். வீடு இப்போதும் காலியாகவே யிருக் கிறது.''

''கொஞ்சம் விவர மாக வீட்டுச் சொந்தக் காரரர் யார், அவர் எங்கே இருக்கிறார்..'' அப்பா முடிக்கவில்லை.

''இங்கே சித்தே வந்துவிட்டுப் போகிறீர் களா?'' என்று உள்ளே இருந்து குரல் வந்தது.

''என்னை உள்ளே கூப்பிடுகிறாள். இதோ

வந்துவிட்டேன்'' என்று சொல்லி விட்டு அவர் உள்ளே போனுர்.

'இதோ வந்து விட்டேன்' என்று போனவர் ஐந்து நிமிஷம் கழித்து வெறுங்கையோடு வந்தார். 'ஐந்து நிமிஷம் ஆகி விட்டதே, ஒரு வேளை காபி கொண்டு வரத்தான் தாமதமாகிறதோ?' என்று நினைத்தவன் அவரைப் பார்த்தவுடன் ஏமாந்து போனேன்.

உள்ளிருந்து வந்த சுதர்சனம். ''ஹும்....ஒண்ணுமில்லே... புதுப் புடைவையைத் தோய்த்து வைத்திருந்தாள். அது அரை மணி நேரமாக வாளியிலேயே இருந்தது. அவள் கைக்காரியமாக இருக்கிருள். அதனுல் அதை உலர்த்தி விட்டுப் போகக் கூப்பிட்டாள். புடைவையைப் பிழிந்து, கொசுவி உலர்த்தி விட்டு வந்தேன்'' என்ருர் சாவதானமாக.

எனக்கு அவர் பேச்சு அதிசயமாகத்தானிருந்தது. அகத்தில், அழுக்குத் துணியை எடுத்துப் போட்டு, கணக்கு எழுதச் சொன்னதற்கு, அம்மா 'தனக்கு ஒழியாது' என்று சொன்னுள். இங்கே என்னடாவென்ருல், ரொம்ப முக்கியமாக வீட்டு விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது பாதியில் எழுந்து போய் மனைவியின் புடைவையைப் பிழிந்து உலர்த்திவிட்டு வந்த காரியத்தைப் பிரமாதமாகச் சொல்கிருரே என்று வியந்தேன். ''சரி, அந்த வீட்டுச் சொந்தக்காரரர் யார், அவர் எங்கிருக்கிருர் என்று சொல்லுங்கள்'' என்ருர் அப்பா.

''அந்தக் கவலையெல்லாம் உங்களுக்கு வேண்டாம். இப்போது எல்லோருமாகப் போய் வீட்டைப் பார்ப்போம். பிடித்திருந்தால் மேற்கொண்டு காரியத்தைப் பார்க்கலாம்.''

''சரி, கிளம்புவோமா?''

''ஆஹா....'' என்று அப்பாவிடம் சொல்லி விட்டு, ''கோமளி, நான் கொஞ்சம் வெளியிலே போறேன். நீ வந்து.. என்று சுதர்சனம் முடிப்பதற்குள், ''வெளியே போயிட்டு வறேன்னு சொல்லுங்கோ'' என்ருள் அவர் அகத்து மாமி. ''சரி, நான் வெளியிலே போய்ட்டு வறேன். நான் திரும்பி வருவதற்குள் என் இரு ஜோடி பூட்ஸுகளுக்கும் பாலிஷ் போட்டு வைத்துவிடு. என்ன, கேட்டாயா?''

''சரி, போட்டுவைக்கிறேன்.''

எங்களோடு கிளம்பினுர் அவர்.

வீட்டைப் பார்க்கப் போனேம். விசாரித்ததில் முதல்நாள் சாயங்காலமே ஒருவர் ஒரு மாத வாடகையை முன் பணமாகக் கொடுத்து விட்டுச் சென்றதாகவும், பால் காய்ச்சிச் சாப்பிட நாளை வர விருப்பதாகவும் தகவல் தெரிந்தது. நாங்கள் வீடு திரும்பினேம்.

* * *

**வீ**ட்டிற்குள் காலடி வைத்தவுடன் அப்பாவின் பார்வை கோட் ஸ்டாண்டி'ல் பாய்ந்தது. உடனே. அவர் பார்வையில் சிறிது தெம்பு ஏற்பட்டது போல் தெரிந்தது. சட்டையைக் கழற்றி நாற்காலியின் முதுகின் மேல் படரப்போட்டு விட்டு ஆசுவாசப் படுத்திக்கொண்டார். உள்ளே அம்மா எங்களுக்குச் சாப்பிடத் தட்டு வைக்கும் சப்தம் கேட்டது.

சமையலறையிலிருந்து வேறு ஏதோ காரியமாக வந்தவள் போல் மேலும் கீழும் பார்த்துப் பாவனை செய்து அப்பாவை லட்சியம் செய்யாததுபோல் நின்ருள் அம்மா.

''என்ன, ஒழிவு கிடைத்ததா?'' என்று கேட்டார் அப்பா.

அம்மா காதில் விழாதது போல் கதவின் மூலையிலிருந்த கழியை எடுத்துக் கொடி மேல் உலர்த்தியிருந்த துணிகளை ஓரமாக ஒதுக்க வாரம்பித்தாள்.

''உன்னைத்தான். ஸ்ரீ மதி பட்டம்மாள் அவர்களே, ஒழிஞ்சுதான்னு கேட்டேன்.''

இம்மாதிரி இக்கட்டான சமயங்களில் மௌனக் கலையை அனுஷ்டிப்பது அம்மாவின் தனிப் பண்பு.

''என்ன கேட்கிறேன்; பதில் இல்லையே! ஓஹோ, இன்னும் ஒழியவில்லையோ? கைக்காரியமாயிருக்கிறீர்களோ?'' என்ருர் அப்பா

தொடர்ந்து: அம்மா பேசினுல் தானே? பதனிட்ட தோல் மாதிரி விறைப்பாக விட்டத்தைப் பார்த்த பார்வையைக் கீழே தணிய விட்டு, கையிலிருந்த குச்சியைக் கதவு மூலையில் சார்த்தி விட்டு உள்ளே போக எத்தனித்தாள். சரி, அம்மா இப்போது பேசமாட்டாள் என்று தெரிந்துகொண்டு தன் கலத்தின் முன் போய் உட்கார்ந்தார் அப்பா. நானும் என் தட்டு முன்னே உட்கார்ந்தேன். அம்மா யந்திரம் மாதிரி பரிமாற ஆரம்பித்தாள். காலை வெயிலில் அலைந்துவிட்டு வந்திருந்தேன். ஆகையால் நல்ல பசி. எனக்கு அம்மா முழுவதும் பரிமாறுவதற்குள் வைத்ததை எல்லாவற்றையும் எடுத்து விழுங்கினேன். அப்பா! வாய்க்கு எத்தனை ருசியாய்ச் சமைத்திருக்கிருள்! நானும் பார்த்துவிட்டேன், அம்மா கோபத்தைக் கொண்ட நாட்களில் எல்லாம் கோபத்தைச் சமையலில் காட்டாமல் பிரமாதமாகச் சமைத்து விடுகிருள். அல்லது அவளறியாமல் சமையல் பிரமாதமாக அமைந்து விடுகிறது.

என்னைப் போல் தோள் பட்டையை ரசனையுடன் ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டு ருசித்துச் சாப்பிட்ட அப்பா, "தேமேன்னு நான் சொன்னவுடனே, 'ஆஹா, சரி, கணக்குப் பார்த்து எழுதிப் போடறேன்' என்று பவ்வியமாகச் சொல்லியிருந்தால் எவ்வளவு பாந்தமாய் இருந்திருக்கும். எனக்கும் மனசு சந்தோஷமாயிருந்திருக்கும். 'ஹூம் ஹூம், எனக்கு ஒழியாது' என்று மங்கம்மா மாதிரி முகத்தில் அறைந்தாற் போல் பதில் சொன்னுல் என்ன அர்த்தம்? வாசலில் நின்ற என் சிநேகிதன் என்ன நினைத்துக் கொள்வான்? 'அடடே, இவனுக்கு வாய்த்திருப்பது ஒரு அடங்காப் பிடாரி போலிருக்கிறது' என்று தப்பாக எண்ணிக்க மாட்டாஞ?" என்று பேசிஞர்.

அப்பா பேசி முடிக்கவில்லை, இத்தனை நேரம் மெளனமாயிருந்த அம்மா திடீரென்று பேச வாரம்பித்தாள்.

"அடேயப்பா! உங்க 'பிரண்டு' தப்பாக நினைத்துக் கொள்வானே என்றுதான் அப்படி நடந்து கொண்டீர்களா? ஆமாம்; நீங்கள் என்னைப் பார்த்து, 'பட்டு. நான் வெளியிலே போய்விட்டு வறேன். நான் வருவதற்கு நாழிகை ஆனுலும் ஆகும். நான் திரும்பி வருவதற்குள் வண்ணான் வந்து விட்டானென்ருல் அழுக்கு எடுத்துப் போட்டுக் கணக்கு எழுதிவை' என்று சொல்லியிருந்தால் நான் ஏன் பதில் பேசியிருக்கப் போகிறேன்? அதை விட்டு விட்டு வீடு கூட்டறவளைக் கட்டளையிடுவது போல், 'ஏய், நான் வெளியிலே போறேன். அழுக்கை எடுத்துப் போடு' என்று தேசிங்கு ராஜன் தோரணையில் ஊரே கேட்கும்படி உத்தரவு போடறது போல் பேசிஞல், வாசலில் நின்ற உங்கள் நண்பர் என்ன நினைத்துக் கொள்வார்! 'இவன் பெண்டாட்டியை என்னமா ஆட்டி வைக்கிருன், பார்! இவன் ஆர்டர் போடுகிருன்; அவள் ஆடி ஓடி வேலை செய்கிருள்!' என்று நினைக்கமாட்டாரா!"

அப்பாவுக்கு அம்மாவின் பேச்சு தூக்கி வாரிப் போட்டது போல் இருந்தது போலும். அம்மாவை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு, "அடி அசடே, யார் எப்படி நினைச்சுண்டா உனக்கென்ன? நீ யாருக்கு வேலை செய்யறே? கொண்டவனுக்குத்தானே? உன்னை வேறு யார் உரிமையோடு ஏவ முடியும்?" என்று கேட்டார்.

"ஆமாம், நீங்களும் யார் எப்படி நினைச்சுண்டா நமக்கு என்ன என்று இருக்கிறதுதானே? உங்களிடம் வேறு யார் 'ஒழியாது' என்று சொல்லப் போகிருர்கள்?' 'ஒழியாது' என்று சொல்லிவிட்டு, சொன்ன காரியத்தை வேறு யார் செய்யப் போகிருர்கள்?"

அம்மா பேசியதில் நியாயமிருந்தது. அப்பா பதில் பேசவில்லை. பேச வக்கு ஏது;

# நானா?

**தங்கமணி**

'...இங்கே, எங்கேயாவது அமர்ந்து இந்தப் பலகாரத்தைச் சாப்பிட்டுத் தீர்த்து விடலாமா...?' என்று, பசியின் வேதனையைத் தாங்காமல் துடித்தது மனம்.

'சாப்பிட்டு விடலாம்; ஆகாரம் எங்கே என்று டாக்டர் கேட்டால், என்ன பதில் கூறுவது...?' என்று வினவியது, உள் மனம் - நிதானமாக.

'ஹூம்!... பதில் கூறுவதுதானா பிரமாதம்!...பருந்து அடித்துக் கொண்டு போய்விட்டது என்றோ, யாரோ ஒரு பைத்தியக்காரன் பிடுங்கிக்கொண்டு ஓடிவிட்டான் என்றோ—இப்படி ஏதாவது ஒன்றைப் புளுகி விட்டால் போகிறது!' என்று அங்கலாய்த்தது மனம்.

'புளுகி விடலாம்; ஆனால்... ஆனால்...' என்று இழுத்துப் பறித்துக்கொண்டு திணறியது உள் மனம். வெறும் வயிற்றுப் பசியின் தீவினையை அடக்குவதற்காக மகத்தான மனிதத் தன்மையைக் களங்கப்படுத்தத் திட்டம் போடும் வெளிமனத்தின் பலவீனத்தைக் கண்டு உள்மனம் வெம்பித் தவித்தது!

பசியின் கொடுமையால் என்னென்னவோ எண்ணி உள்ளம் மருகித் துடிக்க, பலகாரப் பொட்டலத்தை எடுத்துச் சென்று டாக்டரின் எதிரில் வைத்தான் கிருஷ்ணன்.

ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்த டாக்டர் நிமிர்ந்தார். கிருஷ்ணனைப் பார்த்தார். உற்றுப் பார்த்துக் கேட்டார்: ''கிருஷ்ணா, உன் முகம் வாடியிருப்பது போல் தோன்றுகிறதே!''

''இல்லை, டாக்டர்... ஒன்றுமில்லை..'' வியர்த்துக் கொட்டியிருந்த முகத்தைச் சட்டைத் தலைப்பால் துடைத்துக்கொண்டே நெட்டுயிர்த்தான் கிருஷ்ணன்.

ஒரு கண நேர மௌனத்துக்குப் பின், டாக்டர் நாற்காலியை விட்டு எழுந்தார்; ''கிருஷ்ணா, நான் கடற்கரைப் பக்கமாகச் சென்று உலாவிவிட்டு வருகிறேன். நீ இந்தப் பலகாரத்தைச் சாப்பிட்டு விட்டு, இங்கேயே இரு..'' என்று சொல்லிவிட்டு, விர்ரென்று வெளியே போய்விட்டார்.

மனம் வாடியது!

உள் மனம் மலர்ந்தது!

கிருஷ்ணன் முகத்தில் முத்து முத்தாய் வியர்வை துளிக்க, அசையாமல் நின்றான்!..

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, இருள் பையப் பையச் சூழ்ந்து கொண்டிருந்தது. மின்சார விளக்கை எரிய வைத்துவிட்டு, விசிறியைச் சுழல வைத்துவிட்டு, அறைக்குள்ளே 'அன்ன நடை' பழகிக்கொண்டிருந்தான் கிருஷ்ணன்.

''கிருஷ்ணா....!''

குரலைக் கேட்டதும் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

''டாக்டர் எங்கே..?'' என்று கேட்டவாறே வந்து, கிருஷ்ணனுக்கு எதிரிலிருந்த சிறு விசுபலகையில் போய் உட்கார்ந்தான் கரீம். டாக்கீஸில் சோடா கலர் விற்கும் அந்தப் பையன் கிருஷ்ணனின் நண்பன்.

''என்னடா கரீம், டாக்கீஸ் வேலை நேரத்தில் இங்கே வந்திருக்கிறாய்..?'' என்று கேட்டுக் கொண்டே போய், கரீமின் பக்கத்தில் உட்கார்ந்தான் கிருஷ்ணன்.

''டாக்கீஸ் மானேஜர் இங்கே ஒரு வேலையாக அனுப்பி வைத்தார். அப்படியே உன்னையும் பார்த்து விட்டு....ஆமாண்டா, கிருஷ்ணா, இரண்டு மூன்று வாரங்களாக டாக்கீஸ் பக்கம் தலைகாட்டவில்லையே, ஏன்...?'' என்றான் கரீம்.

''இல்லை, இங்கே ஓயாத வேலை...''

''ஓகோ!......''

''சரி, டாக்டர் வரும் நேரமாயிற்று. நீ போய் வருகிறாயா? வேறொன்றும் விசேஷம் இல்லையே?''

''ஒரு முக்கியமான விஷயம்! வந்து..உனக்கு டாக்கீஸில் வேலை

பார்க்க விருப்பமா?'' என்று கேட்டான் கரீம்.

''தினமும் சினிமா பார்க்க எந்தப் பையன்தான் விரும்ப மாட்டான்? உங்கள் டாக்கீஸில் ஏதேனும் வேலை....''

''எங்கள் டாக்கீஸில் இல்லை; சண்முகா தியேட்டரில் ஒரு ஆபீஸ் பையன் வேண்டுமாம். பெரிய மனிதர் யாராவது சிபாரிசுக் கடிதம் கொடுத்தால், டக்கென்று வேலை கிடைத்துவிடும்!...''

''சிபாரிசுக் கடிதம் வேண்டுமென்றால், அதற்கு லஞ்சம் கொடுக்கப் பணம் வேண்டுமே;...''

''ஏன், உங்கள் டாக்டரிடமே சிபாரிசுக் கடிதம் வாங்கினாலும் போதுமே! உங்கள் டாக்டரும் அந்தத் தியேட்டர் மானேஜரும் ரொம்பச் சிநேகிதமாயிற்றே!'' என்றான் கரீம்.

''அப்படியென்றால், காரியம் முடிந்தது போலத்தான்!...'' என்றான் கிருஷ்ணன், சந்தோஷமாக.

''சரி, நான் போய் வரட்டுமா? வந்து..கிருஷ்ணா....ஒரு சின்னச் சீசாவில் கொஞ்சம் 'டிஞ்சர்' மருந்து தருகிறாயா...?'' அசட்டுச் சிரிப்புச் சிரித்தவாறே கேட்டான் கரீம்.

''ஆகா, அதற்கென்ன..? இதோ, தருகிறேன்..'' வயிறு புடைக்கத் தின்ற பலகாரத்தின் வாசனை பீச்சியடிக்க நீண்ட ஏப்பமிட்டவாறே, கிருஷ்ணன் ஓடினான்; சிறு சீசாவில் 'டிஞ்சர்'



மருந்தை ஊற்றி எடுத்துவந்து, கரீமிடம் கொடுத்தான். கரீம், மருந்துப் புட்டியை வாங்கிக் கொண்டு கிருஷ்ணனிடம் விடை பெற்றுக் கிளம்பினான். அவன் சென்றபின், சிபாரிசுக் கடிதம் வாங்குவதற்காக டாக்டரின் வருகையை எதிர்பார்த்து, அறைக்கும் வாசலுக்குமாக ஆவலும் ஆசையுமாக அலைய ஆரம்பித்தான் கிருஷ்ணன்.

அன்றிரவு. பத்துப் பதினொரு மணி இருக்கும். பூட்டிக் கிடக்கும் 'டிஸ்பென்ஸரி'யின் வாசல் திண்ணையில் படுத்துக் கொண்டிருந்தான் கிருஷ்ணன். அவனுக்குத் தூக்கமே வரவில்லை. அவன் இதயத்தில் நிம்மதியில்லை; ஒரே புயல்! புயல்! புயல்!....

கிருஷ்ணன் என்ன நினைத்தானோ; சடக்கென்று எழுந்தான்; அருகிலிருந்த தெரு விளக்கண்டை ஓடினான்; படபடப்பு உந்த கால் சட்டைப் பையிலிருந்த ஒரு நீல நிறக் கடிதத்தை எடுத்தான், பிரித்தான்; பரபரப்புடன், பல தடவைகளுக்குப் பிறகும் மீண்டும் படித்தான்!

'...கிருஷ்ணன் என்னும் இந்தச் சிறுவன் என்னிடம் இரண்டரை வருஷங்களாக விசுவாசமாகவும் புத்திசாலித்தனமாகவும். திருப்திகரமாகவும் வேலை பார்த்திருக்கிறான். உண்மை, ஒழுக்கம், நாணயம், நேர்மை. சுறுசுறுப்பு, சகிப்புத் தன்மை முதலிய விஷயங்களில் இவனுக்கு நிகர் இவன்தான்! அநாதைப் பையன், ஆதரிக்கத் தகுதியுள்ளவன்......'

மாசில்லாத அன்புடனும், மருவற்ற நம்பிக்கையுடனும் எழுதிக் கொடுத்திருக்கும் டாக்டரின் சிபாரிசுக் கடிதத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும், கிருஷ்ணனின் நெஞ்சில் 'சதக், சதக்' கென்று—இல்லை - 'டங், டங்' கென்று இடித்தன! அவன் புழுங்கினான்; தவித்தான். தன்னையும் தன்னைப்பற்றி விமரிசனம் செய்திருக்கும் அந்தச் சிபாரிசுக் கடிதத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கப் பார்க்க, வில்லடிப் பட்டுத் துள்ளி விழுந்து துடி துடிக்கும் புள்ளி மானைப் போலத் தவியாகத் தவித்தான் அவன்!

'ஹ்ம்!..மதுரையிலே....தந்தையை இழந்திருந்த என்னைத் தந்தையாகவுமிருந்து என் தாய் காப்பாற்றினாள்; கண்ணின் மணியாகப் போற்றி வளர்த்தாள். அவள் மரணப் படுக்கையில் நைந்து கிடந்த சமயம், பெட்டியிலிருந்த அவள் தாலிச் சரட்டை எடுத்து விற்றுவிட்டு, பெற்ற தாயைத் தவிக்க விட்டுவிட்டு, சென்னைக்கு ஓடி வந்தேனே - விசுவாசமுள்ளவன் நானா....; சென்னைக்கு வந்தேன்; தாலி விற்ற பணத்தை ஊதாரித்தனமாகச் செலவு செய்துகொண்டு ஜாலியாகச் சுற்றித் திரிந்தேன். சில நாள். பிறகு, பை காலியானதும் பசியும் பட்டினியுமாக அலைந்தேன்; திரிந்தேன். அநாதரவான என் நிலைமையை உணர்ந்து ரிக்ஷாக்காரக் கிழவன் ஒருவன் மனம் இரங்கினான். என்னிடம் ஒரு ரூபாயைக் கொடுத்தான். அருகிலிருந்த ஒரு ஓட்டலைக் காட்டி, 'அங்கே போய் ஐந்தணாவுக்குச் சோறு சாப்பிட்டுவிட்டு, மீதிப் பணத்தை எடுத்துவா' என்றான். அந்த அன்பு நெஞ்சம் அதிர, அந்த ரூபாயை முழுசாக அமுக்கிக் கொண்டு கம்பி நீட்டினேனே - நேர்மையுள்ளவனா நான்-? சோம்பேறி நாயாகத் தெருத் தெருவாக எச்சில் தின்று வாழ்ந்த என்னை அன்புடன் ஆதரித்தார் டாக்டர். அவர் என்னைப் பற்றி விசாரித்தார். என் ஊர் தூத்துக்குடி என்றும், என் அம்மாவும் அப்பாவும் புயலில் இறந்துவிட்டதாகவும் கூறினேனே-உண்மையாளனா நான்...? என்னை மனங்கோணாமல் வளர்த்த டாக்டரின் பொருள்களைத் திருட்டுத்தனமாக விற்றேனே - ஒழுக்கமுள்ளவன் நானா...? நேர்மையுள்ளவன் நானா....?' நாணயமுள்ளவன் நானா..? அன்பும், நம்பிக்கையும் உள்ளவர்களின் ஆதரவுக்குத் தகுதியுள்ளவன் நானா..? நானா..? நானா?'

இறந்த காலத்தின் நீதி நெறி கெட்ட வாழ்க்கைச் சம்பவங்களை

யெல்லாம் நினைக்க நினைக்க, கிருஷ்ண னுக்குக் கபாலமே வெடித்து விடும் போலிருந்தது! அவன் தலையை இரு கைகளாலும் அமுக்கிப் பிடித்துக் கொண்டு ஓடினன்; திண்ணையில் குப்புறப் படுத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழத் துவங்கினன்!....



விடிந்தது.

''கிருஷ்ணு....''

''.........''

''கிருஷ்ணு......''

ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்த கிருஷ்ணனை அன்புடன் உலுப்பி எழுப்பினர், டாக்டர்..

கிருஷ்ணன் எழுந்தான். கண்ணைக் கசக்கிக் கொண்டு நிமிர்ந்து பார்த்தான்.

அன்புப் புன்னகை தவழும் டாக்டரின் கருணை முகம்...

கிருஷ்ணன் துள்ளினன்! பாய்ந்தான்! டாக்டரின் கால்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கதறினன்; ''டாக்டர், சார்;..தயவு செய்து என்னை மன்னித்து அருளுங்கள், டாக்டர் சார்!.. நல்லவராகிய உங்களை, நல்லவன் போல் நடித்து ஏமாற்றி விட்டேன்! அன்பும் நம்பிக்கையுமுள்ள உங்கள் சிபாரிசுக் கடிதத்துக்கு அருகதை யுள்ளவன் நானல்ல; நான் துரோகி! துஷ்டன்! நன்றி கெட்டவன்! நயவஞ்சகன். அயோக்கியன்! பொய்யன்! பாவி!....''

எதையோ ஊகித்துத் தெரிந்து கொண்டவர் போல, டாக்டர் தெளிவாகச் சிரித்தார், சிரித்துக் கொண்டே கிருஷ்ணனைத் தூக்கினர்; அவன் கையிலிருந்த சிபாரிசுக் கடிதத்தை வாங்கினர்; ''இனி நீ எங்கும் போக வேண்டாம், என்னிடமே இரு!..'' என்று சொல்லிக்கொண்டே அதைக் கிழித்தெறிந்தார். கிருஷ்ணனை அன்புடன் அணைத்துக் கொண்டார்; அவன் முதுகை ஆதரவுடன் வருடிக்கொண்டே, மறுபடியும் குரல் மலரக் கூறினர்; ''தம்பி, கிருஷ்ணு!..நீ நல்லவன் தான்; இதை நான் நம்புவது போலவே இனி நீயும் நம்பு! ஆதி காலத்துக் குரங்குதான், தற்காலத்து மனிதன்; அது போல, இறந்த காலத்து அயோக்கியன் தான், நிகழ் காலத்து யோக்கியன்! அந்த என் சிபாரிசுக் கடிதத்துக்கு இனி முழுக்க முழுக்கத் தகுதி யுடையவன்தான், நீ!..'' என்ருர்.




## ஔவைப் பாட்டி

மலரன்

பாட்டி நல்ல பாட்டி – கடவுள்
பக்தி நிறைந்த பாட்டி;
பாடல் பலவும் தீட்டி – நமக்குப்
படைத்த நல்ல பாட்டி.

தமிழுக் காக வாழ்ந்தார் – செந்
தமிழே தெய்வம் என்றார்;
தமிழில் ஞானம் பெற்றார் – இத்
தரணி புகழ வாழ்ந்தார்.

நாடு நாடாய்ச் சென்று – அவர்
நாட்டுத் தொண்டு புரிந்து
வீடு வீடாய்ச் சென்று – அறி
வொளியை வீசச் செய்து

ஆத்திச் சூடி தந்தார் – பல
அறி வுரைகள் சொன்னார்.
கீர்த்தி யால்நாம் வாழ – வழி
நேர்த்தி யாக வகுத்தார்.

ஔவை தந்த நூல்கள் – அவை
அத்த னையும் படித்து
செவ்வை யாய்நாம் வாழ்வோம் – அவரைச்
செந்தமிழில் புகழ் வோம்!

# ஏமாந்த எழுத்தாளர்

**தே. பார்த்தசாரதி**

"சார்!"



எழுத்தாளர் 'ஈர்க்குச்சி' தலையை நீட்டி எட்டிப் பார்த்தார். வெளியே யாரோ ஒரு போலீஸ் அதிகாரி நின்றுகொண்டிருந்தார். 'ஈர்க்குச்சி' தன் அறையிலிருந்து வெளிப்பட்டு, "நீங்கள் யார்? என்ன வேணும்?" என்று கேட்டார்.

"நான் இந்த ஊருக்குப் புதிதாக மாற்றலாகி வந்திருக்கும் இன்ஸ்பெக்டர். என் பெயர் சங்கரன்" என்று அவர் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்ட பிறகு, "நீங்கள்தானே சிறுகதை எழுத்தாளர் மிஸ்டர் 'ஈர்க்குச்சி'?" என்று கேட்டார்.

'ஈர்க்குச்சி'க்குக் கோபம் கோபமாக வந்தது. அவரைத் தெரியாத பேர்வழிகூடத் தமிழ் நாட்டில் ஒருவன் இருக்கிறானே என்று. வந்தவர் போலீஸ் அதிகாரியாதலால் தன் கோபத்தை அடக்கிக் கொண்டு, "ஆமாம், நான்தான். பார்த்தாலே தெரியவில்லையா?" என்று கேட்டார்.

இன்ஸ்பெக்டர் சங்கரன் சிரித்து விட்டு, "நான் ஒரு முக்கியமான கேஸ் விஷயமாக வந்திருக்கிறேன். தங்கள் அறையில் தங்களுடன் தனியே சில நிமிஷங்கள் பேச வேண்டும்" என்றார்.

ஈர்க்குச்சிக்குக் கை கால்கள் உதறல் எடுத்தன. தன் பயத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல், "சரி. அதற்கென்ன:....உள்ளே வாருங்கள், போவோம்" என்று அழைத்துக்கொண்டு போனார்.

இருவரும் இரு நாற்காலிகளில் அமர்ந்து கொண்டதும் இன்ஸ்பெக்டர் ஈர்க்குச்சியை நோக்கி, "எழுத்தாளர் ஸார், நீங்கள் 'ஆட்டோ கிராப்' போடும் பழக்கம் உண்டோ?" என்று கேட்டார்.

ஈர்க்குச்சி திகைப்புடன், "இல்லையே சார். 'ஆட்டோ கிராப்' வந்து கேட்பவர்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்காதே. ஏன், எதற்குக் கேட்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"சமீபத்தில் யாராவது ஒரு ஆள் உங்களிடம் வந்து ஒரு பேப்பரில் 'ஆட்டோகிராப்' வாங்கிக் கொண்டு சென்றானா? நன்றாக நினைவு படுத்திப் பாருங்கள்" என்றார் சங்கரன்.

'ஈர்க்குச்சி' சிறிது நேரம் சிந்தித்து விட்டு அப்படி யாருக்கும் போட்டுக் கொடுத்ததாக எனக்கு நினைவில்லையே! எதற்கு இந்தக்

கேள்வி கேட்கிறீர்கள்?'' என்றார்.

இன்ஸ்பெக்டர் விளக்கினார்: ''ரத்னா ஜுவல்லரி ஸ்டோர்ஸ் முதலாளியிடம் நேற்று ஒரு ஆள் வந்து ஒரு பேப்பரைக் கொடுத்தான். அதில் அந்தக் கடை முதலாளிக்கு நீங்கள் ஒரு கடிதம் எழுதி யிருந்தீர்கள். உங்களுக்கு ரூ 500 விலையுள்ள ஒரு 'நெக்லே'ஸை அனுப்பும்படியும், ஒரு வாரத்தில் பணத்தைத் தந்துவிடுவதாகவும் நீங்கள் எழுதி யிருந்தீர்கள். அதன் அடியில் உங்கள் கையெழுத்து இருந்தது. ஆனால், கடிதத்தில் கண்டிருந்த எழுத்து வேறாக இருந்தது. ஆகவே அந்தக் கடை முதலாளி சாமர்த்தியமாக, 'சரி தம்பி, நாளைக்கு இந்த நேரத்துக்கு வா. நகையை எடுத்து வைத்திருக்கிறேன்' என்று அவனை அனுப்பிவிட்டார். பிறகு எனக்குப் போன் செய்து விஷயத்தை விவரமாகக் கூறி, உங்களைப் பார்த்து உங்கள் கையெழுத்தை வாங்கிக் கொண்டு வரச் சொன்னார். இரண்டு கையெழுத்தும் ஒத்திருக்கிறதா என்று நாங்கள் பார்த்து மேற்கொண்டு விசாரணை செய்வோம்.''

'ஈர்க்குச்சி', ''இந்த மாதிரி சாமர்த்தியத் திருட்டு நான் எழுதும் சினிமாக் கதைகளில்கூட நடந்ததில்லையே!'' என்றார் அவர்.

''சரி, எனக்கு நேரமாகிறது. இதில் உங்கள் கையெழுத்தைப் போடுங்கள். இந்தக் கையெழுத்தும் அந்தக் கடிதத்தில் உள்ள கையெழுத்தும் ஒன்றாக இருக்கிறதா என்று பரிசோதிக்கப் போகிறோம்!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

'இருக்கவே இருக்காது, ஸார். அந்தத் திருட்டுப் பயலே இந்த மாதிரிப் பொய்க் கையெழுத்துப்

# எண்ணிலே படங்கள்

1 முதல் 9 வரையில் 'மூட்டை'






211804

போட்டிருப்பான்: இதோ பாருங்கள், என் கையெழுத்து: எப்படி இருக்கிறது?'' என்று சொல்லி, இன்பெக்டர் காட்டிய காகிதத்தில் கையெழுத்தைப் போட்டார் ஈர்க்குச்சி.

''சரி, மிக்க வந்தனம்: இனிமேல் கேசை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்'' என்று விடைபெற்றுக் கொண்டு போனார் இன்ஸ்பெக்டர்.

சுமார் ஒரு மணி நேரம் சென்றிருக்கும். எழுத்தாளரின் அறையில் இருந்த போன் மணி அலறியது. 'ஈர்க்குச்சி' அதை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டார்.

''ஹலோ..அங்கே யார் பேசறது? கதை, வசனம் 'ஈர்க்குச்சி' யா?....நான்தான் 'ரத்ன ஜுவல்லரி ஸ்டோர்ஸ்' முதலாளி சேதுராம் பேசுகிறேன்....''

''என்ன விசேஷம்?''

''வைர நெக்லேசுக்குப் பணம் எப்போது தருகிறீர்கள்? அடுத்த வாரம் ஆள் அனுப்பட்டுமா?''

''வைர நெக்லேசா: என்ன?''

''ஆமாம் சார்: இப்போதுதானே ஒரு ஆளிடம் வைர நெக்லேசைக் கொடுத்தனுப்பச் சொல்லிக் கடிதம் எழுதியிருந்தீர்கள்? அவனிடம் விலையுயர்ந்த நெக்லஸ் கொடுத்தனுப்பியிருக்கிறோம். உங்களிடம் வந்து கொடுத்திருப்பானே?..என்ன, நெக்லஸ் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? என்ன..என்ன சார்...பதிலையே காணோம்!''

'ஈர்க்குச்சி'யின் முகம் வெளிறியது..இன்ஸ்பெக்டராக அவரிடம் வந்து நடித்தவன் ஒரு பெரிய சாமர்த்தியத் திருடன் என்பதைப் புரிந்துகொள்ள அவருக்கு அதிக நேரம் ஆகவில்லை.

மறுநாள் வெளியான தினசரிகளில் எல்லாம் இந்தச் செய்தி கொட்டை எழுத்துக்களால் தலைப்புகளில் 'சென்னையில் நூதன மோசடி—எழுத்தாளரிடமே சரடு விட்டவன்'' என்று பிரசுரமாகியது[

# கறுப்பு ஸீதா

ராஜலட்சுமி

பள்ளிக்கூடத்திலிருந்து வந்த சிதாவின் முகம் அழுது அழுது வீங்கியிருந்தது. குழந்தையின் முகத்தைக் கண்ட கல்யாணி, ''ஏனம்மா அழுகிருய்? என்ன நடந்தது?'' என்று கேட்டாள். சீதா விசும்பலுக்கிடையே, ''பள்ளிக்கூட ஆண்டு விழாவில் நடக்கப் போகும் நாடகத்தில் எனக்கு ராணி வேஷம் கொடுக்கமாட்டார்களாம். சேவகன் வேஷம்தான் கொடுப்பார்களாம். ஏனென்ருல் நான் கறுப்பாயிருக்கிறேனும்! நான் மட்டும் ஏம்மா உன்னைப்போல் சிவப்பாக அழகாயில்லை?'' என்று கூறிவிட்டு 'கோ' வென்று அழுதாள்.

கல்யாணிக்குக் குழந்தையை எப்படித் தேற்றுவது என்றே தெரியவில்லை. ''சீதா, அழாதே அம்மா! கறுப்பும் சிவப்பும் நம் கையிலில்லை. பகவான் செயல். எந்த வேஷமாக இருந்தாலென்ன? நீ தான் நன்ருக நடிக்கப் போகிருய், பார்!'' என்று தேற்றினுள்.

சீதாவின் மனம் சமாதானமடையவில்லை. பத்து வயதுச் சிறுமி அவள். அழகாக ராணி வேஷம் போட்டுக் கொண்டு தலையில் கிரீடம் தரித்துக்கொண்டு கம்பீரமாக உட்கார வேண்டுமென்று அவளுக்கு ஆசையாக இருக்காதா, என்ன? அவளை எல்லோரும் 'கறுப்பு ஸீதா' என்று பெயரிட்டு அழைத்தது அவளுக்கு வருத்தமாக இருந்தது.

ஆனுல் வகுப்பில் அவள்தான் முதல். டீச்சர்களுக்கு அவளைத்தான் ரொம்பப் பிடிக்கும். அடுத்த வீட்டு அம்புலு தான்தான் அழகாக இருக்கிறேம் என்று சீதாவை எப்போது பார்த்தாலும் கறுப்பு என்று கேலி செய்வது சீதாவுக்குப் பிடிக்கவில்லை. ராணி வேஷம் போட்டுக்கொண்டு அவள் மினுக்கும்போது, தான் மட்டும் ஓர் ஏழைச் சேவகன் வேஷத்துடன் அவள் எதிரில் போய் நிற்க வேண்டியிருப்பதைப்பற்றி நினைக்க நினைக்க அவளுக்குத் துக்கம் துக்கமாக வந்தது. வேறு வழியில்லை. நடிக்காவிட்டால் டீச்சர் விடமாட்டாள். ஏதோ இஷ்டமில்லாமலே ஒத்திகைக்குப் போய் வந்தாள்.

நாடக தினம் வந்தது. கலெக்டர் மனைவி திருமதி இந்திரா பி.ஏ.



அவர்களின் தலைமையில் நாடகம் நடப்பதாக ஏற்பாடு. அத்துடன் வேறு பல நிகழ்ச்சிகளும் போட்டிகளும் நடத்தத் தீர்மானித்தார்கள். சீதா பாரதி பாட்டுப்போட்டி, கவிதைப் போட்டி இரண்டிலும் சேர்ந்திருந்தாள். பள்ளிக்கூடத்தில் ஒரே கூட்டம்.

சீதாவின் அம்மாவும் அம்புலுவின் அம்மாவும் முதல் பெஞ்சியில் அடுத்தடுத்து உட்கார்ந்திருந்தார்கள். நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. முதலில் கடவுள் வணக்கம்; அதன் பின் பாரதிப்பாட்டுப் போட்டி ஆரம்பமாயிற்று. "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா" என்ற பாடலை வெகு அழகாகப் பாடினாள் சீதா. பரிசு அவளுக்கே கிடைத்தது. எல்லோரும்கைகொட்டிக் கரகோஷம் செய்தனர். கவிதைப் போட்டியில் சீதா வெகு அழகாகத் திருக்குறளை ராகம் போட்டுப் பாடினாள். அந்தப் போட்டியிலும் வெற்றி பெற்றாள். கல்யாணியின் உள்ளத்தில் பெருமை பொங்கியது.

நாடகம் ஆரம்பமாயிற்று. கோமாளிச் சேவகன் வேஷத்தில் வந்த சீதா நிமிடத்துக்கு நிமிடம் சபையோரைச் சிரிக்க அடித்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தை வைத்துக் கொள்ளும் மாதிரியும்; காலைக் கோணலாக வைத்துக்கொண்டு நடந்த ஹாஸ்ய நடையும் வெகு வேடிக்கையாக இருந்தன. 'அப்ளாஸ்' கிடைத்தபடி யிருந்தது.

ராணி வேஷத்தில் வந்த அம்புலு நடுநடுவே வார்த்தைகளை மறந்து விட்டுப் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு பின்னாலிருந்து சொல்லிக் கொடுக்கும் டீச்சரையே பார்த்துக் கொண்டு திண்டாடியதைக் கண்ட எல்லோரும் 'ஹோ'வென்று கை கொட்டிச் சிரித்தனர். அம்புலு மேடையிலேயே அழ வாரம்பித்து விட்டாள். சீதா சமயோசிதமாக மேடைக்கு வந்து, "அம்மணி அழாதீர்கள். அரசர் அதிசீக்கிரம் வந்து விடுவார்" என்று சொன்னதும் கொல்லென்று எல்லோரும் சிரித்து, "சபாஷ்-சபாஷ்" என்று கைதட்டினார்கள். அம்புலுவின் அம்மா முகத்தில் ஈயாடவில்லை. கல்யாணி அவளைக் கடைக்கண்ணால் நோக்கித் தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள். அழகாகப் பிறந்துவிட்டால் மட்டும் போதுமா? சாமர்த்தியம் வேண்டாமா?



சீதா தன் பாகத்தை வெளுத்து வாங்கி விட்டாள். நாடகம் முடிந்ததும் திருமதி இந்திரா நிகழ்ச்சியைப்பற்றிப் பாராட்டிப் பேசி விட்டுக் கடைசியில், "இவ்வளவு சின்னக் குழந்தைகளாக இருந்தாலும் வெகு திறமையாக நடித்ததைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. முக்கிய



பையன்: மாமா, இந்தத் தடவை நான் பட்டாஸே வாங்கப் போறதில்லே!

மாமா: அதான் நல்ல பையனுக்கு அழகு!

பையன்: எல்லாம் மத்தாப்பூவும் வாணமுமாவே வாங்கித் தள்ளிடப் போறேன்!

---

மாக இந்த நாடகத்தில் சேவகன் வேஷம் போட்ட சிறுமி சீதா ஒரு பெரிய திரைப்பட நடிகையையே தோற்கடிக்கும் வண்ணம் அவ்வளவு நன்றாக நடித்தாள். தலைமை உபாத்தியாயினியின் வேண்டுகோளின்படி நாடகத்தில் வெகு நன்றாக நடித்த சிறுமி சீதாவுக்கு இந்த வெள்ளிக் கோப்பையைப் பரிசளிக்கிறேன்'' என்று சொல்லி முடித்ததும், ''சபாஷ். சீதா'' என்ற ஏகப்பட்ட கூக்குரல் எழுந்தது. தலைமை உபாத்தியாயினி, ''சீதா'' என்று கூப்பிட்டாள். சீதா சேவகன் வேஷத்திலேயே கோமாளி மாதிரி நடந்துவந்து பரிசை வாங்கிக் கொண்டு ஒரு கும்பிடு போட்டு விட்டுப் பீடு நடை நடந்து கொண்டு உள்ளே போனாள். மறுபடியும் எல்லோரும் ஹோவென்று சிரித்தார்கள்.

நாடகம் முடிந்ததும் எல்லோரும் சீதாவையே சூழ்ந்துகொண்டனர். டீச்சர் அவளை அன்புடன் அணைத்துக்கொண்டாள். ஒரே சமயத்தில் மூன்று பரிசுகளைத் தட்டிவிட்ட அவளை யார்தான் கொண்டாட மாட்டார்கள்? பாவம்! ராணி வேஷம் போட்ட அம்புலுவை ஒருவருமே லட்சியம் பண்ணவில்லை. அவள் அம்மா கும்பலோடு கும்பலாக ஒருவருக்கும் தெரியாமல் வீட்டுக்குப் போய்விட்டாள்.

சீதா வீடு வந்ததும் கல்யாணி அவளை வாரியணைத்து முத்தமிட்டாள். ''பார்த்தாயா! சீதா! சேவகன் வேஷம் போடமாட்டேன் என்றாயே! ராணி வேஷம் போட்டிருந்தால் உனக்குப் புகழும் பரிசும் கிடைத்திருக்குமா? அழகு பகவான் கொடுப்பது. மற்றவை நம் கையில் இருக்கிறது. எந்தப் பாகமாக இருந்தாலும் அந்தப் பாகத்தை நன்றாக நடித்தால்தான் பேர் கிடைக்கும். இப்போது சொல், உனக்குச் சிவப்பாக, அழகாக, மக்காக இருந்தால் பிடிக்குமா? கறுப்பாக இருந்தாலும் புத்திசாலியாக இருந்தால் பிடிக்குமா?' என்று கேட்டாள்.

''சமத்தாகவும் இருக்கவேண்டும்; அழகாகவும் இருக்கவேண்டும். அப்போதுதான் பிடிக்கும்'' என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டாள் சீதா! கறுப்பு ஸீதாவாக இருந்தாலும் அவள் சமர்த்து ஸீதா இல்லையா?

கதை: ஆர்வி

# புலிக்குட்டி

சித்திரம்: ஸாமி





கேட்டே விட்டார். சாஸ்திரி களின் மன நிலையை என்ன சொல்வது? பெருத்த ஏமாற்றம் ஏற் பட்டது. மனம் உடைந்து போய், "மன்னிக்கணும் சார்; நான் ஏதோ விலாசம் மாறுதலாக இங்கே வந்து விட்டேன்" என்று மறுமொழி சொல்லிக் கொண்டே கேட்டுக்கு வெளியே

மதித்துவிட்டான். சாஸ்திரிகள் உள்ளே சென்று வணக்கமாக வெகு மரியாதையுடன், "மணி! என்னைத் தெரிகிறதா உனக்கு?" என்று கேட்டார். ஜட்ஜ் அவர் கள் வந்தவரை ஏற இறங்கத் தலை முதல் கால் வரையில் ஒரு தரம் பார்த்தார். தன்னுடன் படித்த ரகு என்பது ஞாபகத்துக்கு வந்தது. இருந்தாலும் பக்கத்தில் இருக்கும் தன் நண்பர்கள், மனைவி, புது வாழ்க்கையில் ஏற் பட்ட பல மாறுதல்கள் இவை யெல்லாம் ஒரு நொடிப்பொழுதில் அவரது மனத்தை மாற்றிவிட்டன. அந்த எண்ணங்களை உதறித் தள்ளி விட்டு, தன் பழைய நண்பனை வரவேற்காமல், "நீர் யார்?" என்று சற்றும் தயக்கமில்லாமல் வந்து, சற்று நின்று தம்மைச் சமா ளித்துக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார். அவருக்குக் கடவுளது அருள் இருந்தது. நல்ல வேலையாக அவர் பையனுக்கு அந்த வேலையே கிடைத்தது. பின்பு அந்தக் குடும் பத்தினர் ஏதோ நன்றாக வாழ்ந் தார்கள்.

* * *

**நாம்** இப்பொழுது மேலே சொன்ன காட்சிக்கு நேர் மாறுத லான ஒன்றைக் காணப்போகிறோம். கண்ணனும் சுதாமாவும் குருகுல வாசம் செய்த காலம். சாந்திபனி முனிவரது ஆசிரமத்தில் ஒன்று சேர்ந்து பாடங்கள் கேட்டும், குரு சுச்ருஷைகளில் ஈடுபட்டு, குரு வின் வீட்டுக்கு விறகு முதலியவை

களைச் சேகரித்துக் கொடுத்து, குருவின் அருளையும் குரு பத்தினியின் ஆசியையும் பெற்று அவரவர்கள் ஊர் போய்ச் சேர்ந்து விட்டார்கள். அதன் பின்னர் அவர்களது வாழ்க்கையில் பல மாறுதல்கள். சுதாமா பெரிய குடும்பியாகி, பல குழந்தைகளுடனும் தம் தர்மபத்தினியுடனும் இல்வாழ்க்கை நடத்துகிருர். வீட்டில் அன்றாடச் சாப்பாட்டுக்கே மிகவும் கஷ்டம். வறுமை என்பது அவர்களது வீட்டிலேயே குடி புகுந்துவிட்டதோ என்று நினைக்கும்படியாக இருந்தது. அவரது ஏழைமை வாழ்க்கையின் காரணமாக, கிழிந்த ஆடை அணிந்திருந்ததால் குசேலர் என்ற மாறு பெயரும் ஏற்பட்டுவிட்டது. சதா காலமும் பகவானை நினைத்துப் பஜனைகள் செய்வதும் நான்கு வீடுகளுக்குச் சென்று யாசித்து அதில் கிடைக்கும் அரிசியைக் கொண்டு கஞ்சியாகவோ அல்லது சத்துமா போலவோ செய்து, அதை நிவேதனம் செய்து, குழந்தைகளுக்கும் கொடுத்துத் தாங்களும் சாப்பிடுவார்கள். பல நாட்கள் ஒன்றும் கிடைக்காமல் பட்டினியாகவும் இருக்க நேரிடும். குழந்தைகளுக்குக் கொடுத்து, பர்த்தாவும் சாப்பிட்டபின் மீதி இருந்தால் தான் அந்தப் பதிவிரதை சாப்பிட முடியும். இல்லாவிட்டால் மறு நாள் வரை பட்டினிதான். இந்த விதமாகப் பல நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் சென்றன. குழந்தைகள் வளர, வளர வறுமைப் பிணி அதிகமாயிற்று. குசேலரின் மனைவி மிகவும் வருத்தமுற்ருள். குழந்தைகளின் பசியைத் தீர்க்க ஒன்றும் வழியில்லாது போயிற்றே என்று மனம் வாடினுள். இதற்கு என்ன செய்வது என்று தெரியாது திகைத்து ஒரு நாள் மெய்ம்மறந்து கடவுளிடம் முறையிட்டாள்.

கண்ணன் அவள் கண் முன் தோன்றினுன். உடனே பழைய நாட்களின் நினைவு அவளுக்கு ஏற்பட்டது.



குசேலர் சொன்ன வார்த்தைகளை மனத்தில் நினைத்துப் பார்த்தாள். ஒரு நாள் குரு வீட்டிற்கு விறகு வெட்டி வரக் கண்ணனும் சுதாமாவும் காட்டிற்குப் போனார்களாம். அப்போது மழை வந்துவிடவே இரவு காட்டிலேயே தங்கும்படி நேரிட்டதாம். குழந்தைகள் வராமையால் குரு பதற்றங்கொண்டு காட்டிற்குத் தேடி வந்துவிட்டாராம். இப்படி, குருகுல வாசத்தில் ஏற்பட்ட பல அநுபவங்களைக் குசேலர் சொல்லக் கேட்டிருந்தாள். அந்த நண்பனை இப்பொழுது நம் வறுமை நிலையில் போய்க் கண்டு வந்தால் ஏதாவது நன்மை ஏற்படலாம் என்று அவள் நினைத்தாள். இதைத் தன் பர்த்தாவிடம் எப்படிச் சொல்வது என்று யோசித்தாள். மறுநாள் குசேலர் ஜப தபங்களை முடித்துக்கொண்டு நிம்மதியாகத் தியானத்தில் இருக்கும் சமயம், அவர் மனைவி அங்கே வந்து சற்றுத் தயக்கத்துடன் நின்றாள். ஏதோ சொல்ல விரும்புகிறாள் என்பதை உணர்ந்த குசேலர், "என்ன விஷயம்?" என்றார்.

"நீங்கள் துவாரகை சென்று கண்ணனைக் கண்டு வரலாகாதா?" என்றாள் மனைவி. உடனே குசேலர், "ஆமாம், உண்மை, வெகு காலமாயிற்று. அவனைக் காண வேண்டும் என்று எனக்கும் மிகுந்த ஆசை. சீக்கிரமே போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, சற்றுப் பெருமூச்சு விட்டார். 'பழைய நண்பனைப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் சந்திக்கப் போகிறோம்; வெறுங்கையுடன் அவனைப் போய் எப்படிக் காண்பது? ஏதாவது கொண்டு போகவும் நமக்கு வழியில்லையே!' என்ற ஏக்கம் அவருக்கு உண்டாயிற்று. இதை முகத்திலேயே கண்டுகொண்டாள் அவர் மனைவி. கண்ணனுக்கு அவல் என்றால் மிகவும் பிரியம் என்று சொல்லக் கேட்டிருந்தாள் அவள். வீட்டிலோ மணி தானியம் இல்லை. ஆயினும் அவள் புல்லரிசியைச் சேகரித்து வந்து, அதை அவலாக இடித்து ஒரு சிறு கந்தைத் துணியில் முடிந்து, குசேலரிடம் கொடுத்து வழி அனுப்பினாள்.

குசேலர் துவாரகைக்கு வந்து கண்ணனது மாளிகை வாயிலில் வந்து நின்றார். கண்ணன் அந்தப்புரத்தில் ருக்மிணி தேவியுடன் இருந்த சமயம் அது. ஓர் ஏழைப் பிராம்மணன் தன்னைக் காண வந்திருப்பதாகக் கேள்விப்பட்ட கண்ணன் எழுந்து வந்தான். பார்த்தால், பழைய நண்பன் சுதாமா என்பதைத் தெரிந்து கொண்டான். உடனே ஓடோடியும் வந்து தன் பால்ய



Advt.

சிநேகிதனை மார்போடு இறுக அணைத்துக்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றான். தான் அமர்ந்திருந்த ஆசனத்தில் குசேலரை இருக்கச் செய்து உபசாரங்கள் பல செய்தான். காலைக் கழுவி விட்டான். வழி நடந்து வந்த வலி தீரக் காலைத் தடவிவிட்டான். ருக்மிணி தேவி இருவருக்கும் சாமரம் வீசினாள். சிறு வயதில் குருகுல வாசம் செய்துவிட்டுப் பிரிந்து போன பின் நடந்தவற்றை ஒன்று விடாது வெகு ஆவலுடன் விசாரித்தான் கண்ணன். குடும்ப யோக க்ஷேமங்களைப்பற்றி விசாரிக்கத் தொடங்கியவுடன் குசேலர் தம்முடைய வறுமையைத் துவாரகாநாதனாகிய கண்ணனிடம் சொல்ல வெட்கினார். கண்ணனைக் கண்ட பின் அவருக்கு மற்றவை யாவும் ஒரு பொருட்டாகப் காணப்படவில்லை. ஆனால் கண்ணனுக்கு நிலைமையைச் சொல்லவா வேண்டும்? குசேலர் எவ்விதக் கஷ்டத்திலும் தன்னையே தியானம் செய்துகொண்டு வந்திருக்கிறார் என்பதை அவன் நன்கு உணர்ந்திருந்தான். பிறகு குசேலரைப் பார்த்து, ''எனக்கு என்ன கொண்டு வந்திருக்கிறாய்?'' என்று, வெட்கத்துடன் பதில் சொல்லத் தயங்கும் குசேலரது தோளில் தொங்கிக் கொண்டிருந்த சிறு மூட்டையைப் பிடுங்கித் தானே அதை எடுத்து அவிழ்த்து அதிலிருந்த அவலை ஒரு பிடி எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். ''ஆகா, என்ன சுவை! என்ன சுவை!'' என்று சுவைத்துத் தின்றான். அன்புடன் கொண்டு வரப்பட்ட அமிர்தம் அல்லவா! மற்றொரு பிடியும் எடுத்து வாயில் போட்டுக்கொண்டான். அத்துடன் பக்கத்தில் நின்ற ருக்மிணி தேவியானவள் கண்ணனது கையைப் பிடித்து மூன்றாம் பிடியை எடுக்காது நிறுத்தினாள். இந்த இரண்டு பிடி அவலுக்கே குசேலரது குடிசை பெரிய மாளிகையாகவும் துவாரகையில் கண்ணனது ஐசுவரியத்தைப் போன்ற செல்வமும் அங்கே ஏற்பட்டு விட்டன. குசேலர் துவாரகையில் சில நாள் தங்கி, கண்ண




சோமு: டேய், நீ பார்க்காத சினிமாப் படம் எது? சட்டுனு சொல், பார்ப்போம்!

ராமு: நான் பார்க்காதது தானே! இதுவரை ரிலீஸ் ஆகாத படம்தான்!

—எஸ். வி.

னுடன் அளவளாவிவிட்டு, ஊர் திரும்பினார். தன் வீடு எங்கே இருக்கிறது என்பதையே கண்டு பிடிக்க முடியவில்லை. தட்டுத் தடுமாறி வீடு சேர்ந்து, வாயிலில் தன் மனைவி சேடிமார்களுடன் தம்மை வரவேற்க நிற்பதைக் கண்டார். மெய்ம்மறந்து, ''எல்லாம் நின் செயல், கண்ணா! உன் திருவிளையாடல் போலும் இவை எல்லாம்'' என்று தம் மனத்தில் எண்ணி, நாம் ஒன்றும் கேட்காத போதே அவன் அருளால் செல்வத்தை நமக்கு மழை போல் பொழிந்திருக்கிறானே என்று பரம சந்தோஷத்தை அடைந்தார். ''செல்வம் வந்தால் செருக்கும் வந்தடையும்'' என்பதைப் பொய்ப்பிக்க ஒரு சாத்துவிகத் தம்பதியாக இருவரும் சதா காலமும் பகவானையே நினைத்து, பக்தி பரவசத்தோடு நீடூழிகாலம் வாழ்ந்தார்கள்.

# பொம்மைக் கல்யாணம்



எஸ். பாலசுப்பிரமணியம்

பாலுவும் நீலுவும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிய மாட்டார்கள். அவ்வளவு சிநேகம். எங்கே சென்றாலும், என்ன விளையாடினாலும் இருவரும் சேர்ந்தே செல்வார்கள். பாலுவிடம் ஓர் அழகான பெண் பொம்மை இருந்தது. அதே மாதிரி நீலுவிடம் ஓர் அழகான ஆண் பொம்மை இருந்தது. 'இந்த இரண்டு பொம்மைகளுக்கும் கல்யாணம் செய்தால் பார்ப்பதற்கு எத்தனை அழகாக இருக்கும்!' என்று எண்ணி இருவரும் ஒரு நாள் பொம்மைக் கல்யாணம் செய்யத் தீர்மானித்தார்கள். ''வரதட்சிணை என்ன?'' என்று கேட்டாள் நீலு. ''இரண்டு சாக்லெட்!'' என்றான் பாலு.

''சும்மா கேட்டேன்! 'வரதட்சிணை வாங்குவது ரொம்ப அநியாயம்' என்றார் என் அப்பா. அதனால் நானும் உன்னிடம் வரதட்சிணை வாங்க மாட்டேன்.''

''ஆமாம். பெண்ணைப் பெற்றவரோ இல்லையோ! அப்படித்தான் சொல்வார். என் அப்பா அப்படிச் சொல்லவில்லை. அவர் வரதட்சிணை வாங்குவது ரொம்ப நியாயம் என்கிறார். அதனால் இந்த இரண்டு சாக்லெட்டுகளையும் வைத்துக் கொள். முகூர்த்தம் நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்!'' என்றான் பாலு. நீலுவும் அந்தச் சாக்லெட்டுகளை வாங்கி வாயில் போட்டுக் கொண்டாள். மறுநாள் கல்யாண ஏற்பாடுகளெல்லாம் பிரமாதமாக நடந்தன. கூட்டத்தில் நான்கு குத்துவிளக்குகளை ஏற்றிச் சதுரமாக வைத்தாள் நீலு. அவற்றைச் சுற்றி மல்லிகை மலர்களை மாலையாகக் கட்டினாள் நீலுவின் தோழி சாரு. கிராமபோனுக்குச் சாவிகொடுத்து நாகஸ்வரக் கச்சேரிப் பிளேட்டை எடுத்து வைத்தான் பாலு, பல குழந்தைகள் இந்தப் பொம்மைக் கல்யாணத்தில் பங்கு எடுத்துக் கொண்டார்கள். மொத்தத்தில் கல்யாணம் ரொம்ப அமர்க்களமாக நடந்தது. பாலு எல்லோருக்கும் கற்கண்டு வழங்கினான்.

கல்யாணமானதும், ''பாலு! பாலு! உன் பொம்மை என்னுடைய நாட்டுப் பெண்ணாகி விட்டாள். இனிமேல் அவள் எனக்குத்தான் சொந்தம் என்று சொல்லிக்கொண்டு தன் பொம்மையுடன் பாலுவின் பொம்மையையும் சேர்த்து எடுத்துக்கொண்டு ஓட ஆரம்

பித்தாள் நீலு. பாலு அழ ஆரம்பித்து விட்டான்.

ஏனெனில் நீலு இப்படிச் செய்வாள் என்று அவன் எதிர்ப்பார்க்கவே இல்லை. என்னவோ விளையாட்டுக்காகக் கல்யாணம் பண்ணி விட்டு அப்புறம் அவரவர்கள் பொம்மையை அவரவர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று அவன் நினைத்துக்கொண்டிருந்தான். கடைசியில் நீலு, ''உன்னுடைய பெண் இனிமேல் என்னுடைய வீட்டில் வாழவேண்டியவள்தானே? அதனால் நான் உன் பொம்மையைக் கொடுக்கவே மாட்டேன்!'' என்று பிடிவாதம் பிடித்தாள். ''ஆகட்டும், பார்க்கலாம்!'' என்று ஏதோ தீர்மானத்துக்கு வந்தவனாகப் பாலு முணுமுணுத்தான்.

தீபாவளி வந்தது. பாலு நீலுவை மெள்ள நெருங்கி, ''நீலு, நீலு! நாம் தலை தீபாவளி விளையாட்டு விளையாடலாமா? தையற் கடையிலிருந்து ரொம்ப அழகான துணிகளை எல்லாம் கொண்டு வந்து வைத்திருக்கிறேன். அப்பா வேறே எனக்குக் கற்கண்டு, சாக்லெட் எல்லாம் வாங்கி வந்து கொடுக்கிறார். நீ மாப்பிள்ளையையும் பெண்ணையும் தலை தீபாவளிக்காக என் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறாயா? நான் இரண்டு பொம்மைகளுக்கும் எண்ணெய் ஸ்நானம் செய்து வைத்து, புதுப் புதுத் துணிகளையெல்லாம் கட்டி உனக்கும் கற்கண்டு, சாக்லெட் எல்லாம் கொடுக்கிறேன். சீர் வரிசைகளெல்லாம் நான் என்னதான் பிரமாதமாகச் செய்தாலும் நீ எடுத்ததெற்கெல்லாம் கோபித்துக் கொண்டு, 'இதோ என் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு



போய் விடுகிறேன்!' என்று என்னைப் பயமுறுத்துகிறாயா? நான் உன் காலில் விழுந்து கன்னத்தில் போட்டுக் கொண்டு அப்படியெல்லாம் செய்துவிடாதே என்று உன்னை ரொம்பவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தீபாவளிக்கு மறுநாளே நீ மாப்பிள்ளையையும் பெண்ணையும் அழைத்துக் கொண்டு உன் வீட்டுக்குப் போய் விடலாம். என்ன விளையாடலாமா?'' என்று கேட்டான் பாலு. ''தீபாவளிக்கு மறுநாள் பெண்ணையும் பிள்ளையையும் என்னுடன் அனுப்பி வைக்கும்போது நீ கல்யாணத்தின்போது அழுத மாதிரி அழக்கூடாது. என்ன, தெரியுமா?'' என்று கேட்டாள் நீலு.

'அழத்தான் அழுவேன்!' என்று சொல்வாளா என்ன, பாலு? ''ஊஹூம். அன்று நான் விளையாட்டுக்காக அழுததை நீ நிஜமென்று நினைத்துக் கொண்டாயா?'' என்று ஒரு போடு போட்டான் பாலு.

இரண்டு பொம்மைகளும் நீலுவின் கையிலிருந்து பாலுவின் கைக்கு மாறின. மாறினதுதான் தாமதம்! நீலுவைப் பார்த்து, ''நீயும் மாப்பிள்ளையும் என் பெண்ணை ரொம்பவும் படுத்துகிறீர்களாம். அவளைப் பார்க்கும்போது எனக்குப் பரிதாபமாயிருக்கிறது. இனி அவளை உங்கள் வீட்டுக்கு அனுப்புவதில் எனக்குக் கொஞ்சம்கூடப் பிடித்தமில்லை. வேண்டுமானால் உன் பிள்ளையை மட்டும் நீ அழைத்துச் செல்'' என்று நீலுவின் பொம்மையை வீசி எறிந்து விட்டுத் தன் பொம்மையை மட்டும் எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்துவிட்டான் பாலு. நல்லவேளை! நம்மைப் போல் செய்யாமல் அவனுடைய பொம்மையை மட்டும் எடுத்துக்கொண்டு என் பொம்மையைக் கொடுத்துவிட்டு ஓடினானே என்று சந்தோஷத்துடன் திரும்பினாள் நீலு.



**கடை ஆள்:** கொஞ்சம் சாக்கை அப்படியே பிடிச்சுக்குங்க! 5 படி நெல்லைப் போட்டுடறேன்! மூட்டை வந்து இறங்கினதுமே அரிசியிலே வழக்கப்படி நெல்லைக் கலந்து வச்சிக்க மறந்திட்டேன்!

## பொழுதுபோக்கு - விடை:



# கண்ணனின் நண்பன்

**எஸ். கே. ராவ்**

ரகுவும் மணியும் ஆப்த நண்பர்கள். வகுப்பில் இருவரும் ஒன்ருகச் சேர்ந்துதான் உட்காருவார்கள். பள்ளிக்கூடத்தில் மட்டுமல்ல; மற்றச் சமயங்களிலும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதில்லை. படிப்பில் ஒரு வகுப்பிலும் தவருமல் சேர்ந்தே மெட்ரிகுலேஷன் வந்துவிட்டார்கள். அதன் பிறகு குடும்ப வாழ்க்கையின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் காரணமாக ரகுவின் படிப்பு அத்துடன் நின்றுவிட்டது. மேல் படிப்புக்குத் திறமை இருந்தும் அதற்கு வேண்டிய பொருள் வசதியில்லை. ஆகவே சம்ஸ்கிருதம் இலவசமாகப் படித்து ஒரு பள்ளிக்கூடத்தில் சம்ஸ்கிருத பண்டிதராக உத்தியோகம் ஏற்ருன். ரகு இப்பொழுது பஞ்சக்கச்சமும், பட்டை பட்டையாக விபூதியும் அணிந்துகொண்டு திரிகால ஜப தபங்களுடன் ரகுநாத சாஸ்திரிகளாகக் குடும்ப வாழ்க்கை நடத்தினுன்.

மணியோ பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன். நல்ல பண வசதி இருந்ததால் காலேஜில் சேர்ந்து படித்தான். சட்ட பரீக்ஷையுடன் முடித்துக்கொண்டு சீக்கிரமாகவே ஜட்ஜ் உத்தியோகத்தில் நல்ல பெயரும் புகழும் சம்பாதித்தான். அதிருஷ்டமும் ஒத்தாசையாக இருந்ததால் ஹைக்கோர்ட் ஜட்ஜாகவும் ஆனுன். பெரிய பங்களாவும் வில்லை போட்ட சேவகர்களும் வாசலில் ஜஸ்டிஸ் ராமசுப்பன் என்ற அவரது இல்லத்தைக் குறிக்கும் பெயர் போர்டும் அவரது பெருமையான உயர்ந்த வாழ்க்கையை நன்கு தெரியப்படுத்தின.

இப்பொழுது ரகுநாத சாஸ்திரியின் குடும்பத்தில் ஏழைமை காரணமாகப் பல கஷ்டங்கள். அவருக்கு ஐந்தாறு குழந்தைகள். சம்பளம் மிகக் குறைவு. மூத்த பையன் சற்று வயதானவன். அவனை மிகவும் சிரமப்பட்டு இந்த வருமானத்தில் ஹைஸ்கூல் படிப்பு வரை கொண்டு வந்துவிட்டார். அதற்குமேல் படிப்பைப்பற்றி எண்ண வழியில்லை. அத்துடன் அவனுக்கு ஏதாவது ஓர் உத்தியோகம் கிடைத்தால் குடும்பத்தின் கஷ்டங்கள் குறையும். வறுமை நீங்கிச் சௌகரியமாக இருக்கலாம். பல இடங்களில் முயற்சி செய்தும் வேலை கிடைக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஹைக்கோர்ட்டில் ஒரு குமாஸ்தா வேலை காலியாக இருப்பதாக அவருக்குத் தெரியவந்தது. அப்பொழுது தன்னுடைய ஆப்த நண்பன் மணி அங்கே ஜட்ஜாக இருப்பது அவருக்கு நினைவுக்கு வந்தது. எப்படியாவது அவனைப் பார்த்துச் சொன்னுல் வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டாயிற்று.

ஒரு நாள் சாயந்தரம் ரகுநாத சாஸ்திரிகள் தன் நண்பன் மணியைப் பார்க்கப் போனுர். ஜட்ஜ் வீட்டுக் காம்பவுண்டு புல்தரையில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவைகளில் ஸ்ரீ அண்டு ஸ்ரீமதி ராமசுப்பன், குழந்தைகள், சிநேகிதர்களுடன் டீ சாப்பிட்டவாறு பேசிக்கொண்டிருந்தார்கள். ரகுநாத சாஸ்திரிகள் பெயருக்கேற்ற தோற்றத்துடன் அங்கே சென்ருர். கேட்டில் இருந்த வில்லை போட்ட சேவகன் பல ஆக்ஷேப சமாதானங்களுக்குப் பின்னர், ஜட்ஜ் தமக்கு மிகவும் பிரியமான சிநேகிதர் என்று சாஸ்திரிகள் சொன்னதால் இவரை உள்ளே போகவிடாது நிறுத்தினுல் ஜட்ஜ் ஏதாவது அபசாரமாக நினைத்துத் தன்னைக் கோபித்துக் கொள்வாரோ என்று பயந்து, உள்ளே போக அநு


அப்பா! என்னை எங்கும் அனுப்ப வேண்டாம்! எனக்கு இங்கே வேலை அதிகம் இருக்கிறது!
ஒரு மாதம் ஆனபின்னர் . . .
யார் இவர்கள்?




(தொடரும்)

# எங்கள் யோசனைகள்

மதிப்புக்குரிய ஆசிரியருக்கு! வணக்கம்.

கல்கத்தாவில் கண்ணன் (பெண்கள்) கிளைக் கழகத்தின் மாஜி செயலாளர் நான். இப்பொழுது படிப்பதால் அதிகம் எழுத எனக்கு நேரமே இருப்பதில்லை.

1. முதலாவதாக, கண்ணனில் இதழுக்கு இதழ் போட்டிகள் நடத்த வேண்டும். போட்டி என்றால் பெரிய பெரிய நிபந்தனைகள் விதித்து, பெரிய பரிசுகள் கொடுக்க வேண்டும் என்று கூறவில்லை. ஏதாவது ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு, அதைப்பற்றி எழுதச் சொல்லலாம். உதாரண மாக, 'என் ஆசிரியர்', 'தமிழ் நாட்டுக் குழந்தைகளும் மற்ற நாட்டுக் குழந்தைகளும்', 'குழந்தை இலக்கியம்', 'நீ பார்த்த ஏதாவது ஒரு தொழிற்சாலை' முதலியன. பற்பல விஷயங்களில் கட்டுரைகள் எழுதினால், பல விஷயங்களும் தெரியும்; பள்ளிக்கூடப் பரீக்ஷைகளில் வியாசம் எழுது வதில் சுவையும் தோன்றும்.

2. இரண்டாவதாக, பேனா நண்பர்கள் பகுதியைப் பற்றி. நீங்கள் இப்பொழுது இப்பகுதிக்காக அரைப் பக்கமே கொடுக்கிறீர்கள். இது போதாது. இப் பகுதிக்காகக் குறைந்தது இரண்டு பக்கங்கள் வேண்டும்.

எல்லா நாட்டுக் குழந்தைகளுடனும் நாங்கள் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்புகிறோம். மலேயா, பர்மா, சிங்கப்பூர், இலங்கை, பியூஜித் தீவுகள், அந்தமான், தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களில் அநேக தமிழ்ச் சகோதர சகோதரிகளுடன் தொடர்பு கொள்ள நாங்கள் மிக மிக ஆவலாக இருக்கிறோம். நீங்கள் சும்மா விலாசத்தை மட்டும் வெளியிட்டால் போதாது. அவர்களுக்கு விருப்பமான விஷயங்கள், பொழுது போக்குகள் என்று எல்லா விஷயமும் தர வேண்டும்.

3. மூன்றாவதாக மிக முக்கியமான ஒரு விஷயம். ஒவ்வோர் இதழிலும் ஏதாவது ஒரு தொழிலைப் பற்றிய கட்டுரை நிச்சயமாக இருக்கவேண்டும். ப்ளாஸ்டிக் பொம்மைகள், கண்ணாடி வளையல்கள். எழுதும் பேனா, காகிதம், இவை எப்படி உருவாகின்றன என்று - இவை பாட புத்தகத்தில் இல்லை - நீங்கள்தான் எங்களுக்கு ஒவ்வொன்றாகச் சொல்லவேண்டும்.

4. நான்காவதாக 'என் எதிர்காலம்' என்ற தலைப்பில் கண்ணன் அங்கத்தினர்களைக் கொண்டே ஒவ்வொரு கட்டுரை எழுதச் சொல்ல வேண்டும்.

5. மாணவர்களுக்காக, கல்லூரி மாணவர்கள் சார்பாகத்தான் நானும் பேசுகிறேன், கல்லூரி மாணவர்களிடம் ஆனந்த விகடனுக்கு உள்ள பொறுப்பை விட நம் கண்ணனுடையது அதிகம். ஒரு தமிழ்க் குழந்தைப் பத்திரிகையையோ, ல்லது பொதுவாகத் தமிழ்க் குழந்தை இலக்கியத்தையோ சிறப்படையச் செய்ய வீறுகொண்டு எழுவார்கள். குழந்தைகளுக்கு எழுதவும் பெரும் ஆர்வம் இவர்களுக்கு உண்டு. தொழிற்சாலைகளைப் பற்றிய விஷயங்களை, ருசிகரமான சரித்திர உண்மை களை, பற்பல தேசங்களைப் பற்றிய விஷயங்களை இரசாயன விசித்திரங் களை எழுதலாம். அவர்களும் தங்கள் தங்கள் பாடங்களில் அதிகத் தேர்ச்சி பெறுவார்கள்.

ஆனந்த விகடனில் வகுத்திருப்பது போலவே நீங்களும் அவர்களுக் காகத் 'திட்டம்' வகுக்கலாம். ஒரு குறிப்பிட்ட இந்தத் திட்டத்தை மட்டும் நீங்கள் அமலுக்குக் கொண்டு வருவீர்களானால் தமிழ்நாட்டு இளைஞர் சமூகத்தையே ஒன்று சேர்த்த பெருமையை அடைவீர்கள்.

வணக்கம்.

தங்கள் உண்மையான, ரா. லக்ஷ்மி.

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4,

## கண்ணன் கிளைக் கழகம்

| | |
|---|---|
| பழையபேட்டை கிருஷ்ணகிரி | உபதலைவர்: அ. நரசிம்ம மூர்த்தி<br>காரியதரிசி: ம. வெ. ஸ்ரீதரன்.<br>உதவி காரியதரிசி; சி. என். ஜி. கிருஷ்ணன். |

பாரதி இளைஞர் மன்றத்தின் சார்பில் கிளைக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'பாரதி' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் நூல் நிலையம் ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றன.

திருவையாறு கிளைக் கழகத்தின் சார்பில் பாரதி விழா 16-9-56 அன்று மாலை புஷ்யமண்டபத் தெரு இலவச வாசகசாலையில் கொண்டாடப் பட்டது. பாரதி அவர்களின் நண்பரான வ. ரா. அவர்களின் சகோதரர் திரு வ. ராஜகோபால ஐயங்கார் அவர்கள் தலைமை தாங்கினர். திரு பி. நாராயணராவ் சொற்பொழிவு ஆற்றினர். தேசிய கீதத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

### பேனா நண்பர்கள் (பெண்கள் மட்டும்)

1. P. A. இந்திராவதி, கிங்ஸ்டன் காட்டேஜ், குன்னூர் ரோடு, உதகமண்டலம்.
2. M. ஜானகி, ஆறும் படிவம்-C, சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.
3. S. சத்தியபாமா, ஆறும் படிவம்-C., சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.
4. E. பத்மா, C/o ஈச்வர ஐயர், 'ஈச்வர விலாஸ்', குட்ஸ் ஷெட் தெரு, மதுரை.
5. சாரதாமணி, 151, கௌரி ஸ்டோர், பூசலாவ, இலங்கை.

---


## கண்ணன் வெளியீடுகள்

குழந்தைகளுக்கான கண்ணன் வெளியீடுகள் பெயர் பெற்றவை. அரிய விஷயங்கள்; உயர்ந்த கதைகள்; கவர்ச்சியான படங்கள்! நல்ல பதிப்பு; குறைந்த விலை. இவை கண்ணனின் தனிச் சிறப்புக்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| லீடர்மணி - ஆர்வி | 1 | 8 | கழுகும்கிளியும்-'சோமசன்மா' | 0 | 8 |
| சந்திரகிரிக்கோட்டை-'ஜனு' | 1 | 4 | தவளையும் காளையும் - 'சோம சன்மா' | 0 | 8 |
| அசட்டுப் பிச்சு - ஆர்வி | 1 | 0 | அபாயச் சங்கு - 'நீலம்' | 0 | 8 |
| ஜக்கு - ஆர்வி | 0 | 8 | பாரஸீக ரோஜா - ஆர்வி | 0 | 5 |
| விளையும் பயிர் - கி. வா. ஜ. | 0 | 8 | குளிகைத்தீவு - ஆர்வி | 0 | 4 |
| விஞ்ஞானம் பேசுகிறார் - பெ.நா.அ. | 0 | 8 | மாஸ்டர் பாலகுமார் - ஆர்வி | 0 | 4 |
| சமர்த்து மைனு - தி. ஜ. ர. | 0 | 8 | தூங்கும் அழகி - ஆர்வி | 0 | 4 |
| ஏரிக்கரை மாளிகை - 'ஜனு' | 0 | 8 | நீச்சல் பழக்கம் | 0 | 3 |
| மின்னல் அரக்கன் - 'ஜனு' | 0 | 8 | கோழி விதைத்த நெல் | 0 | 3 |
| ஜம்பு - ஆர்வி | 0 | 8 | தங்கத்தின் பந்து | 0 | 3 |

கண்ணன் அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்டு.

---

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4**

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542



# கண்ணன் தீபாவளி மலர்

அத்தனை வாண வேடிக்கைகளையும் மலரிலே கண்டு மகிழலாம்

- ★ பிரபலமான ஆசிரியர்களின் கதைகள், கவிதைகள்
- ★ மூவர்ணச் சித்திரங்கள்; வெட்டி ஒட்டும் படங்கள்
- ★ முழுநீளக் கதைகள்; சித்திரக் கதைகள்
- ★ ஹாஸ்யத் துணுக்குகள் முதலியன

***எல்லாம் நிறைந்த மலர் கண்ணன் மலர்***

**விலை 1 ரூபாய்தான்**

இன்றே உங்கள் பிரதிக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்



கண்ணன் ✠ மயிலாப்பூர் ✠ சென்னை-4.